க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

“கம்பராமாயண – குகப்படலம்.”



தமிழ்







தொகுப்பு..

ஆசிரியர்: திரு. இ. அநூஷன் [National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான, (கம்பராமாயண)குகப்படலம்.


.பாரதி படிப்பகம்.



கம்பராமாயணம்.

இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது . கம்பராமாயணம் எனும் நூல்**கம்பர் எனும் பெரும் புலவரால்** இயற்றப்பட்ட தமிழ் நூலாகும் இந்நூல் .**இந்து சமய இதிகாசங்கள் இரண்டினுள் ஒன்றான இராமாயணத்தினை மூலமாக**க் கொண்டு இயற்றப்பட்டதாகும்கம்பரால் . இயற்றப்பட்ட**கம்பராமாயணம் ஒரு வழி** நூலாகும் இது .**வடமொழியில் வால்மீகி என்பவர் இயற்றிய இராமாயணத்தினைத் தழுவி** எழுதப்பட்ட நூல் ஆகும் இது .**ஒரு வழி நூலாகவே இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் தமிழ் மொழியில் இயற்றியுள்ளார்** .**வடமொழி கலவாத தூய தமிழ்ச்சொற்களைத் தனது நூலில் கையாண்டதால் கம்பர், தொல்காப்பிய நெறி நின்றவர்** என்று புகழப்படுகிறார். . **"வடசொல் கிளவி வடஎழுத் தொரீ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே.." - தொல்காப்பியம், எச்சவியல், 5** மூல இலக்கியமான வடமொழி இராமாயணத்திலிருந்து சில மாறுபாடுகளோடு கம்பர் இந்நூலை இயற்றியிருந்தார் .**கம்பர் இயற்றிய இராமாயணம் என்பதால் இது கம்பராமாயணம்** என்று அழைக்கப்படுகிறது.

கம்பராமாயணம் **பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்** எனும் **ஆறு காண்டங்களையும் நூற்றுப்பத்தொன்பது)119) படலங்களையும்** உடையது .**காண்டம் என்பது பெரும்பிரிவினையும் படலம் என்பது அதன் உட்பிரிவினையும்** குறிக்கும் . **ஏழாம் காண்டமாகிய என்னும் பகுதியை கம்பரின் சம "உத்திர காண்டம்"காலத்தவராகிய "ஒட்டக்கூத்தர்"** தமிழிலக்கியத்தில் .**இயற்றினார் என்பர்காப்பிய வளர்ச்சி கம்பரின் காலத்தில்**பன்னிரெண்டாம் .பி.கி) (நூற்றாண்டு**உச்சநிலையினை** அடைந்தது என்பர்இந்நூலின் சிறப்பு கருதியும் திருக்குறளின் பெருமை . **தமிழுக்குக"** கருதியும் இவ்விரு நூல்களையும்° **கதி**.என்பர் (கம்பராமாயணம் திருக்குறள்) **"** கம்பரின் இராமாயணத்தைக் **கம்பநாடகம் எனவும் கம்பச்சித்திரம்** எனவும் கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் அழைப்பதுண்டு**வரமிகு கம்பன்"** .கம்பரின் யாப்பு வண்ணங்கள் நூல் நெடுகிலும் மின்னி மிளிர்கின்றன . **ய) சொன்ன வண்ணமுந் தொண்ணூற்றாறே°ாப்பு வண்ணங்களின் எண்ணிக்கை 96)"** என்றொரு கணக்கீடும் உண்டு.



கம்பராமாயணம் **பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாக**ப் பெற்றது .**அணி, பொருள், நடை ஆகியவற்றால் சிறந்து** விளங்குவதுசொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு . .தமிழ்ப்பண்பாட்டோடு இயைந்து விளங்குவது தாம் இயற்றிய இந்நூலிற்கு கம்பர் முதலில் **இராமவதாரம்** என்றே பெயரிட்டிருந்தார்ஆனால் . இராமாயணம் பலரால் இயற்றப்பட்டதால் கம்பரின் பெயரோடு இணைத்து .கம்பராமாயணம் என்றே அழைக்கப்படுகிறது

கம்பர் இக்காப்பியத்தை அதன் **மூலமான வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தார்**அந்த முயற்சியை ஓர் அரிய உவமையின் . .வாயிலாக வெளிப்படுத்துகிறார்**பசியுடைய பூனை ஒன்று பாற்கடலைக் கண்டு அதை நக்கிக் குடித்துவிட ஆசைகொண்டது போல** தன் முயற்சியை ஒப்பிடுகிறார். இது அவையடக்கமாகக் கொள்ளப்படுகிறது .

கம்பர் இராமகாதையை எழுதுவதற்கு உறுதுணையாக இருந்தவர் சடையப்ப வள்ளல் ஆவார் இதற்கு . **நன்றிபாராட்டும் விதமாக தனது காப்பியத்தில் ஆயிரம் பாடல்களுக்கு ஒருபாடல் எனும் வீதத்தில் சடையப்ப வள்ளலைப் போற்றிப்** பாடியுள்ளார்.



கம்பர் இராமாயணத்தினை எழுதியபின்பு, அதனை **திருவரங்கத்தில் அரங்கேற்றம்** செய்ய விரும்பினார் . திருவரங்கத்தில் உள்ளோர்கள், தில்லை தீட்சதர்கள் ஒப்புக் கொண்டால் இராமாயணத்தினை திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யலாம், இல்லையென்றால் வேண்டாம் என்று கூறிவிடுகின்றனர் .அதனால் கம்பர் தில்லை சென்றார் . அங்கே தீட்சிதர்களாக இருக்கும் மூவாயிரம் நபர்களும் ஒன்று சேர்க்க இயலாமல்இருந்த போது, ஒரு குழந்தை இறந்தது . அப்போது கம்பர் தன்னுடைய .அந்தக் குழந்தைக்காக அனைத்து தீட்சிதர்களும் கூடி நின்றார்கள் இராமாயணத்திலிருந்து**நாகபாசப் படலம்** என்ற பகுதியைப் பாடி குழந்தையை உயிர்ப்பித்தார்தீட்சிதர்கள் . தான் இயற்றிய இராமாயணத .அனைவரும் மகிழ்ந்தர்தினை **திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ய அனுமதி**யும் பெற்றார்.

திருவரங்கத்தில் உள்ளவர்கள் **அரங்கேற்றத்திற்கு முன்பு சடகோபரைப் பாடும் படி கூறியமையால்**, கம்பர் **சடகோபர் அந்தாதி**யைப் பாடினார்அதன் பின்பு இராமாயணத்தினை திருவரங்கத்தில் அரங்கேற்றம் . .செய்தார்



1 பாலகாண்டம் 22

2 அயோத்தியா காண்டம் 12

3 ஆரண்ய காண்டம் 11

4 கிட்கிந்தா காண்டம் 17

5 சுந்தர காண்டம் 15

6 யுத்த காண்டம் 39

இராவணனை அழிக்க திருமால் மனித அவதாரம் எடுக்கிறார் .**தசரதன் கோசலை தம்பதியினருக்கு -** தசரதனுக்கும் .**இராமனாக திருமால் பிறக்கிறார்கைகேயி மற்றும் சுமித்திரை** ஆகியோருக்கும் **இலக்குவன், பரதன், சத்ருகன்** ஆகியோர் பிறக்கின்றனர்.தசரதனுடைய அரண்மனையில் வளர்ந்து வருகின்றனர் . இராமனையும், இலக்குவனையும் **விசுவாமித்திரர்,** தன்னுடைய யாகத்திற்குக் காவலாக அழைத்துச் செல்கின்றார் விசுவாமித்திரரின் யாகத்தினை அழிக்க வந்த .**தாடகை** எனும் அரக்கியை இராமன் கொல்கிறார்தாடகையைப் போல யாகத்தினை அழிக்க வந்த அரக்கர்களையும் இராமனும் ., இலக்குவனும் அழிக்கின்றனர். **மிதிலைக்கு** இராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திரர் அழைத்துச் செல்கிறார் . வழியில், கல்லாக இருந்த **அகலிகை** இராமனின் கால்தூசு பட்டு உயிர்பெறுகிறாள் அவளை .**கௌசீக முனி**வருடன் சேர்த்துவிட்டு மிதிலைக்குச் செல்கின்றனர் அங்கு .**சீதை**க்கு சுயம்வரம் நடக்கிறது அதில் இராமன் கலந்து கொண்டு . **சிவதனுசை** உடைத்து, சீதையை மணக்கிறார்.



இராமன் சீதையை திருமணம் செய்து கொண்டு அயோத்தியாவிற்குச் செல்கிறார்உடன் இலக்குவனும் .,



விசுவாமித்திரரும் செல்கின்றனர்அயோத்தியின் மன்னரான தசரதன் . இராமனுக்கு**பட்டாபிசேகம்** செய்ய ஏற்பாடுகளைச் செய்கிறார்அதனை . அறிந்த மக்களும், மந்திரிகளும் மகிழ்கின்றனர் .**மந்திரை எனும் கூனி** பரதனின் தாயான **கைகேயி**டம் சென்று அவளுடைய மனதினை மாற்றுகிறாள்கைகேயி . தரதன் முன்பு தந்த இரண்டு வரங்களை இப்போதைய சூழ்நிலைக்குத் தக்கவாறு, **இராமன் காடாளவும், பரதன் நாடாளவும்** கேட்டுப் பெறுகிறாள். **இராமனும், சீதையும் காட்டிற்கு செல்லுகையில், இலக்குவனும்** உடன் செல்கிறான் மூவரும் காட்டிற்கு சென்று .**முனிவர்களையும், குகனையும்** சந்திக்கின்றார்கள் .**குகனை தன்னுடைய மற்றொரு சகோதரன்** என்று இராமன் பெருமையாக கூறுகிறார்தசரதன் இறந்து போனதால் ., இறுதிக் காரியங்களைச் செய்துவிட்டு பரதன் இராமனை காட்டில் வந்து சந்திக்கிறார் . ஆன .அயோத்திய அரசை ஏற்க இராமனிடம் வற்புறுத்துகிறார்ால் இராமன் அதனை ஏற்க மறுக்கின்றார் பரதன் இராமன் மீண்டும் வந்து பொறுப்பு ஏற்கும் வரை இராமனின் . **பாதுகைகளை வைத்து அரசு** செய்கிறான்.



இராமன் காட்டில் **விராதன், சரபங்கன், அகத்தியர், சடாயு** ஆகியோர்களைச் சந்திக்கிறார் . அவர்களின் மூலமாக அரக்கர்களைப் பற்றியும், ஆயுதங்களைப் பற்றியும் அறிந்து கொள்கிறார். **இராவணனுடைய தங்கை சூர்ப்பணகை** இராமனைக் கண்டு காதல் கொள்கிறாள் ஆனால் இராமன் . **ஏகப்பத்தினி விரதன்** என்று பிற பெண்களை ஏற்காமல் இருக்கிறான் இலக்குவன் .**சூர்ப்பணகையின் மூக்கினை அரிந்து** அனுப்புகிறான் அதனால் .**இராவணனிடம்** சென்று **இராமனின் மனைவி சீதையைப் பற்றியும் அவளுடைய அழகினையும் கூறி, சீதையின் மீது மோகம்** கொள்ள வைக்கிறாள். இராவணன் **மாயமானை** அனுப்பி இராமனையும், இலக்குவனையும் சீதையிடமிருந்து பிரித்து, **சீதையைக் கவர்ந்து** செல்கிறார் வழியில் .**சடாயு** சீதையை மீட்கப் போராடி வீழ்கிறார்சீதை .யை இல்லத்தில் காணாது தேடி வரும் சகோதரர்களுக்கு இராவணனைப் பற்றிக் கூறிவிட்டு உயிர்விடுகிறார் சடாயு.



சீதையைத் தேடிச் செல்கின்ற இராமனும், இலக்குவனும் **கிட்கிந்தைக்கு** வருகிறார்கள் அங்கு .**அனுமனை**ச் சந்திக்கிறார் இராமர் . அனுமன்**சுக்கிரீவன்** என்பவரை இராமருக்கு அறிமுகம் செய்கிறார் . **சுக்கிரீவனின் மனைவியை சுக்கிரீவனுடைய அண்ணன் வாலியே கவர்ந்து** சென்று விடுகிறார்அதனால் .



இராமன்**வாலியைக் கொன்று சுக்கிரீவனின் மனைவியை மீட்கிறார்.** இராமனும் தன்னைப் போல மனைவியை இழந்து தவிக்கிறான் என்பதை அறிந்த **சுக்கிரீவனும், அவனுடைய குடிமக்களான வானரங்களும் இராமனுக்கு உதவ** முன்வருகிறார்கள் .**அங்கதன்** என்பவர் தலைமையில் அனைவரும் செல்கின்றனர் வழியில் .**சம்பாதி எனும் சடாயுவின் அண்ணனைச்** சந்திக்கின்றனர் .**சம்பாதி இலங்கையில் சீதை சிறைப்பட்டு இருப்பதைத் தெரிவிக்கின்றார்**இலங்கைக்குச் ச .ெல்ல ஏற்றவர் அனுமன் என்று தீர்மானித்து அனுமனிடம் தெரிவிக்கின்றனர் .**அனுமனுக்கு** அவருடைய பெருமையை

உணர்த்தி அவர் **இலங்கை செல்ல விஸ்வரூபம்** எடுக்கிறார்.



அனுமன் இலங்கைக்குச் செல்ல வான்வெளியில் பறந்து செல்கிறார் வழியில் எதிர்படும் தடைகளை .**இராம நாமம்** கொண்டு வெற்றிபெற்று இலங்கையை அடைகிறார் அங்கே . **அசோகவனத்தில்** உள்ள சீதையைக் கண்டு, தான் இராமனின் தூதுவன் என்று கூறி, இராமனின் அடையாளமான **மோதிரத்தினைத்** தந்து தெரிவிக்கிறார்சீதையும் அந்த . மோதிரத்தினைப் பெற்றுக் கொண்டு**சூளாமணி** எனும் அணியைத் தருகிறாள் .இராவணனைச் சந்தித்து அனுமன் இராமனின் பெருமைகளைக் கூறி, சீதையை இராமனிடம் சேர்த்துவிடும்படி கூறுகிறார் ஆனால் .**இராவணன் அனுமன் வாலில் தீயிடுகிறான் . அனுமன் இலங்கையையே எரித்து**விட்டு இராமனிடம் சென்று சீதையைக் கண்டதைக் கூறுகிறார்.







சீதையை மீட்க **நீலன் மற்றும் நளன்** தலைமையில் வானர வீரர்கள் **தனுஷ்கோடி முதல் இலங்கை வரை கடற்பாலம்** அமைத்தல், **இராவணனின் தம்பி வீடணன் இராமரிடம் அடைக்கலம் அடைதல்,** சீதையை விட்டுவிடுமாறு இராமர் **அங்கதனை இராவணனிடம் தூதனுப்புதல்,** இராமரின் கோரிக்கையை மறுத்த இராவணனின் படைகளுடன் **சுக்கிரீவன், அங்கதன் அனுமான், ஜாம்பவான், நீலன் மற்றும் நளன்** தலைமையிலான வானரங்கள் மற்றும் இராம, இலக்குமணர்கள் போரிடுதல், போரில் இராவணனின் மகன்களில் **இந்திரஜித்** தவிர **அதிகாயன், பிரகஸ்தன், திரிசிரன், நராந்தகன் தேவாந்தகன் முதலிய மகன்கள் -, தம்பி கும்பகர்ணன்** மற்றும் பெரும்பாலான படைத்தலைவர்கள் மடிதல், **இந்திரஜித்தின் நாகாஸ்திரத்திற்கு இலக்குமணன் பலியாகும்** நிலையில், **ஜாம்பவான் ஆலோசனையின் படி, மேரு மலையில் உள்ள சிரஞ்சீவினி மூலிகைக் குன்றைப் பெயர்த்தெடுத்து** வருதல், **சிரஞ்சீவினி மூலிகைக் காற்றால் இலக்குமணனும், இறந்த ஆயிரக்கணக்கான வானரர்களும் உயிர்தெழுதல்,** பின்னர் நடந்த கடுமையான போரில் **இலக்குமணன் இந்திரஜித்தை கொல்லுதல்,** இறுதியில் **இராமர் இராவணனைக் கொன்று போரை முடித்து** வைத்தல், **வீடணனுக்கு இலங்கையின் மன்னராக** இராமர் முடி சூட்டுதல், **இராமரின் ஆணையின் படி, இலக்குமணன் தீ மூட்ட, சீதை தீயில் பாய்ந்து, தான் கற்புள்ளவள்** என்பதை உறுதி செய்தல், பின்னர் **இராமர், சீதை, இலக்குமணன் முதலானோர், வீடணன் மற்றும் அனுமான் உள்ளிட்ட வானரக் கூட்டத்துடன் புட்பக விமானத்தில் ஏறி அயோத்தி வந்தடைதல்,** அயோத்தியில் **இராமருக்கு வசிட்டர் பட்டாபிசேகம்** செய்து வைத்தல் போன்ற விவரங்கள் யுத்த காண்டத்தில் விவரிக்கப்படுகிறது. அன்றிலிருந்து **இராமராச்சியம்** தொடங்கி **ஆயிரம் ஆண்டுகள் இராமர் நன்னெறிகளுடன் அயோத்தியை ஆண்டார்**.



கம்பர் இந்த நூலை இயற்றிய பிறகு எண்ணற்ற இராமாயண நூல்கள் படைக்கப்பட்டனஇவ்வாறு .



இராமாயண நூல்கள் தோன்றுவதற்கு கம்பராமாயணம்தூண்டுதலாக இருந்தது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்அவையாவன ., **தக்க ராமாயணம், குயில் ராமாயணம், இராமாயண அகவல், கோகில இராமாயணம், அமர்த இராமாயணம், இராமாயணக் கீர்த்தைகள்** மற்றும் **பால இராமாயணம்**. வால்மீகி இராமாயணம் கம்பராமாயணத்தின் மூலமாக இருந்தாலும், கம்பர் அவற்றை வரிவரி மொழிபெயர்ப்பு செய்யாமலும், அந்நூலில் இடம்பெற்றுள்ள அனைத்தையுமே அப்பிடியே தந்தும் கம்பராமாயணத்தினை இயற்றவில்லை எனவே .**இராமன் அசைவ உணவினை ஏற்றமை, இராவணனின் வன்மையும், சீதையைத் தொடாமல் இருந்த நெறியையும்** கம்பராமாயணத்தில் காணலாம் .



கம்பர்

"கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றொரு பழமொழியே உருவாகும் அளவிற்கு, கம்பரது புகழும், கவித்திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது .**'கவிபேரரசர் கம்பர்', 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்', 'கல்வியில் பெரியவர் கம்பர்'** என்றெல்லாம் அவரது கவித்திறனைப் பறைசாற்றும் அளவிற்கு அவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன . **சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் சொல்வன்மைக்** கொண்டவராக இருந்த அவர், **ஆழமான கவிதை அனுபவமும், கற்பனை ஆற்றலும், புலமைத் திறனும் பெற்று, அவரது சமகாலத்துப் புலவர்களான ஓட்டக்கூத்தர், சேக்கிழார் போன்றோரின் நன்மதிப்பையும்** பெற்றிருந்தார் .**'கம்பராமாயணம்', 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை'** போன்றவை அவர் படைத்த படைப்புகளாகும்இதில் ., **'கம்பராமாயணம்'**, தமிழ் இலக்கியத்தில் தலைச்சிறந்த காவியமாகக் கருதப்படுகிறதுமேலும் ., கம்பரின் தனித்துவமான சுவைக்கினிய பாணியில் அதைப் படைத்ததால், அது **உலகளாவிய அங்கீகாரம்** பெற்றது எனலாம் ஒரு .**சிறந்த தமிழ் எழுத்தாளர், அறிஞர், கவிஞர், நாடக ஆசிரியர்**, என்று பன்முகம் கொண்டு விளங்கியவர் கம்பர்

கம்பர் அவர்கள், **கிபி 12 ஆம் நூற்றாண்டில், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவழுந்தூர்** என்னும் இடத்தில் **ஆதித்தன் என்பவருக்கு மகனாக ஒச்சன் என்ற உட்பிரிவில்** பிறந்தார். அவரது பெற்றோர்கள், கடவுள் நரசிம்மரின் தீவிர பக்தர்கள் என்பதால், அவருக்கு 'கம்பர்' என்று பெயர் சூட்டினர் .**'கம்பா' என்றால் 'தூண் என்று பொருள்** .'பக்தப் ப்ரகலாதனைக் காக்க, நரசிம்மர், தூணைப் பிளந்து கொண்டு வந்தார்' என்ற பக்திக் கூற்றைக் கொண்டு, அவருக்கு அப்பெயர் சூட்டினர் அவரது பெற்றோர்.

நாதஸ்வர வித்வான்களான ஒச்சன் பரம்பரையில் பிறந்திருந்தாலும், அவர் தமிழ்நாட்டில் உள்ள **வெண்ணைநெல்லூர் என்னும் ஊரில் உள்ள ஒரு பணக்கார விவசாயி ஒருவரால் செல்வ, செழிப்போடு எடுத்து வளர்க்கப்பட்டார்**இளம் வயதிலிருந்தே அவர் ., தொன்மையான மொழிகளான சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியின் மீது பேரார்வம் உடையவராக இருந்ததால், அவரது நலம் விரும்பியான வள்ளல் சடையப்ப முதலியார் என்பவரின் உதவியுடன் அவ்விருமொழிகளை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார்சிறு . அம்மொழிகளின் அடிப்படையை .வயதிலிருந்தே அவருக்குக் கவிதைகள் எழுதும் ஆர்வம் இருந்தது பாரம்பரிய முறையில் நன்கு கற்ற அவர், பல கவிதைகளும், நூல்களும் எழுதத் தொடங்கினார்அதன் பின்னர் ., அவரது கவிப்புலமை எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது.

மாபெரும் கவிஞராக உருவெடுத்த கம்பரின் புகழை அறிந்த அப்போதைய சோழ மன்னர், அவருக்கு அழைப்பு விடுத்தார்அரண்மனைக்கு சென்ற அவர் ., மன்னரின் அன்பு கட்டளைக்கிணங்க அவரது

படைப்புகளில் சில வரிகளை அவருக்குப் பாடிக் காட்டினார்அவரது கவித்திறனை நேரில் கண்டு வியந்த . சோழ மன்னர், அவருக்கு, **'கவிஞர்களின் பேரரசர்'** என்றும் அர்தமுடைய **'கவி சக்கரவர்த்தி'** என்றும் பட்டம் சூட்டி, அவருக்கு சொந்தமான பெருவாரிய நிலத்தைப் பரிசளித்து, அதற்கு **'கம்பநாடு'** என்றும் பெயர் சூட்டினார்.

கம்பரின் தாய்மொழி, தமிழ் என்றாலும், சமஸ்கிருதத்திலும் அவர் புலமைப் பெற்றே விளங்கினார் . அதற்கு சான்று, அவர் எழுதிய 'கம்பராமாயனம்'. முனிவர் வால்மீகி சமஸ்கிருதத்தில் படைத்த ராமாயணத்தை, அவர் தமிழில், அவருக்குரித்தான பாணியில் மீண்டும் எழுதினார்அவரது பா .டல் வரிகளின் அழகு, அற்புதமான நயம், உவமானம் மற்றும் பல வகையான வியக்கத்தகு கவிதை நடைகள் அவரது பாரம்பரிய கவிதைகளில் இடம் பெற்றிருக்கும்தமிழ்மொழியின் பெருமையை ., இடைக்கால காலகட்டங்களில் அற்புதமாக வெளிக்காட்டியதால், அவர் **'கம்ப நாட்டாழ்வார்'** என்றும் அழைக்கப்பட்டார்அவர்., கம்பராமாயணம் தவிர, **'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை'** போன்ற அற்புதப் படைப்புகளைப் படைத்துள்ளார்.

கம்பராமாயணம், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பட்ட இடத்தைப் பிடித்து, தமிழ் இலக்கியத்தையே வானளவிற்கு உயர்த்தியது என்று சொன்னால் அது மிகையாகாதுகவிதை வடிவங்களில் . ஆளுமைப் பெற்றவராக இருந்த அவர், வார்த்தைகளில் பலவிதமான அற்புதங்களை நிகழ்த்துபவர் என்பது அக்காவியத்தில் பல இடங்களில் தெளிவாகத் தெரியும்உருவகமும் ., உவமானமும் நிறைந்த கம்பராமாயணம், பின்னாளில் வரும் கவிஞர்களுக்கு ஒரு **குறிப்புதவி நூலாக** அமைந்தது வால்மீகி எழுதிய ராமாயணத்தில் .24, 000 ஈரடிகள் இருக்கும், ஆனால், கம்பராமாயணத்தில் 11, 000 சந்தங்கள் இருக்கும் .**தமிழர்களின் கலாச்சார உணர்திறனுக்கேற்ப அவர், வால்மீகியின் ராமாயணத்தில் பல இடங்களை மாற்றி அமைத்து**ள்ளார் . :அவற்றுள் சில

சீதையைக் கண்ட ஆஞ்சநேயர், அதை ராமனிடம் தெரிவிக்கும் போது, **"கண்டனன் கற்பினுக் கணியை கண்களால் ...."** என்ற அற்புத வார்த்தைகள் இன்றளவும் தமிழ் இலக்கியத்தில் மறக்கமுடியாத அடிகளாக இருந்து வருகிறது. இராவணன், சீதையைக் கடத்திக் கொண்டு போகும் போது, **"அவள் கற்பிற்கே இலக்கணமாக இருந்தாள் என்பதற்காக, அவள் இருந்த குடிசையோடு சிறிதளவு நிலத்துடன் பெயர்த்தெடுத்து அவளைக் கடத்திக்கொண்டு போனான்"** என்றும் அற்புதமாக விளக்கியிருப்பார்.

போரில், ராமன் தொடுத்த ஒரு அம்பு, அவனது உடல் முழுவதும் துளைகளை ஏற்படுத்தியதுஇதைக் . கம்பர், **"ராவணன் சீதை மீது கொண்ட அழிவுநோக்கிய காதல், அவனது உடலில் எங்குள்ளது என்பதை அறியும் சல்லடையாக இருந்தது அந்த அம்பு"** என்று யாராலும் யூகிக்க முடியாத அளவிற்கு அற்புதமாக விளக்கியிருப்பார்.

கவிச்சக்ரவர்த்தி கம்பர், **கிபி 1250 ஆம் ஆண்டில் இயற்கை** எய்தினார். இதுவரை வந்த **தமிழறிஞர்கள் பட்டியலில், கம்பர் யாரும் எட்ட முடியாத இலக்கில்** உள்ளார் என்று தான் சொல்லவேண்டும்ஆனால் ., இன்றளவும் தமிழ் அறிஞர்கள் மத்தியில், கம்பனின் கவிதைத் தொகுப்புகள் இணையற்றதாகவே உள்ளது என்று சிறப்பாகவும், பெருமிதத்தோடும் சொல்லலாம்.

<u>உள்ளடக்கம்:</u>

1 - 13: பெருஞ்சேனையுடன் வந்த பரதனைக் கண்டு சினங்கொண்ட குகன், தன் படையைக் கூட்டியது.
14 - 23: சினங்கொண்ட குகனின் சூளுரை /வஞ்சினம்.
24 - 37: குகனைப் பற்றிச் சுமந்திரன் சொல்லக் கேட்ட பரதன், குகனைக் காண வருதலும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்கொண்டவாறும்.
38 - 43: இராம, இலக்குவன் குறித்து குகனிடம் பரதன் விசாரித்தமையும் குகனின் விளக்கமும்.

<u>இந்தப் பகுதியில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்</u> அ) பாத்திரப் படைப்பு (இயல்பு, பேச்சு, செயல் முதலானவை) ஆ) சம்பவச் சித்திரிப்பு இ) அணிகளின் கையாளுகை ஈ) சந்தர்ப்பம் கூறல்.

கம்ப இராமாயணம் – அயோத்தியா காண்டம் -<u>குகப்படலம்</u>

கம்பராமாயணத்தின் **இரண்டாவது காண்டமாக அயோத்தியா காண்டம்** அமைந்துள்ளது. **காண்டம் (பெரும் பிரிவு): படலம் (சிறுபிரிவு அல்லது உட்பிரிவு)** எனப் பொருள்படும். **அயோத்தியா காண்டத்தில் ஆறு செல் படலத்திற்கு அடுத்ததாகவும், இறுதிப்படலமாகிய திருவடிசூட்டுப் படலத்திற்கு முன்னதாகவும் "குகப்படலம்(கங்கைகாண் படலம்)"** விளங்குகின்றது. இதில் **72 பாடல்கள்** உள்ளன. **பரதன் குகனைச் சந்தித்து அவனது உதவியுடன் அவனுக்கும் அவனுடன் வந்தவர்களும் கங்கையைக் கடந்து வனம் சென்று இராமனைக் காண முடிந்தமையால் இது குகப் படலம்** என அழைக்கப்படுகின்றது. அது போலவே **பரதன் கங்கை நதியைக் காண்கின்ற படலமாகையால் "கங்கை காண் படலம்"** எனவும் கூறப்படுகிறது. ஏற்கனவே இராமன் கங்கைக் கரையைக் காணும் பகுதியாக ஆறாவது படலமாக **"கங்கைப் படலம்"** இருப்பதால் பரதன் கங்கையைக் காணும் பகுதி **"கங்கை காண் படலம்"** என வழங்கப்பட்டது.



பரதன் நடந்து சென்று கங்கைக் கரையை அடைதல், சேனைகளுடன் வரும் பரதனைக் கண்டு குகன் சந்தேகமுற்றுத் தென்கரையில் நின்று போருக்குத் தயார் நிலையில் இருக்குமாறு தனது சேனைகளுக்குக் கட்டளையிடல், குகன் பரதனைக் காணத் தனி நாவாயில் (படகு) வடகரைக்கு வருதல், சுமந்திரன் மூலம் இராமனின் சகோதரன் போன்றவன் குகள் என்பதை அறிந்த பரதன் அவனை அன்போடு நோக்குதல், பரதனின் எளிமைக் கோலம் கண்ட குகன், தான் தவறாக எண்ணியதற்கு வருத்தப்படல், மேலும் பரதனை வாழ்த்தி இராமன் உறைத்த, உறங்கிய இடங்களைக் காட்டி, இலக்குவன் செயல்களையும் எடுத்துக்கூற, அதுகேட்டுப் பரதன் வருத்தமுறல், குகன் கட்டளைப்படி வரவளைக்கப்பட்ட நாவாய்களில் ஏறிப் பரதனும், சத்துருக்கனும், தாய்மார்களும், உடன்வந்தோர்களும், சேனைகளும் கங்கையைக் கடந்து தென்கரையை அடைதல், இடையிலே நாவாயில் தாய்மார்களைக் குகனுக்குப் பரதன் அறிமுகப்படுத்த. குகன் அவர்களை வணங்குதல், தாய்மார்கள் பல்லக்கில் வர, பரதன் நடந்துவரல், நடந்து வரும் பரதனைப் பரத்தவாச முனிவர் வரவேற்றல். முதலான செய்திகள் குகப்படலத்தில் இடம்பெற்றுள்ளன.

பரதன் கங்கையையடைதல்

பூ விரி பொலன் கழல் பொரு இல் தானையான்
<u>காவிரிநாடு அன்ன</u> கழனி நாடு ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான் .1

<u>உரை</u>

பூவிரி **-பூத் தொழிலாற் சிறப்புற்ற**; பொலன்கழல் - **பொன்னாற் செய்யப்பெற்ற வீரக்கழலை அணிந்த**; பொருஇல் தானையான் **-ஒப்பற்ற சேனையை உடையபரதன்**; காவிரி நாடு அன்ன **-காவிரி நதியால் வளம்பெறும் சோழ நாட்டை ஒத்த (தமிழகத்துச்)**; கழனிநாடு ஒரீஇ **- வயல்வளம் பொருந்திய கோசல நாட்டை விட்டு நீங்கி**; தாவரசங்கமம் என்னும் தன்மையயாவையும் **-நிலைத்திணை; இயங்கு திணை என இரண்டாகப் பிரிக்கப்பெறும் எல்லாஉயிர்களும்**; இரங்கிட **தன் நிலை) - கண்டுவருந்த** (; கங்கை எய்தினான் - **கங்கைக்கரையை அடைந்தான்.**

பூ வேலைப்பாட்டினால் சிறப்புப் பெற்ற, பொன்னால் செய்யபட்ட வீரக் கழலை அணிந்த, ஒப்பற்ற சேனையை உடைய பரதன் காவிரி நதியால் வளம் பெற்ற சோழ நாட்டை ஒத்த வயல் வளம் மிக்கதாகிய கோசலை நாட்டை விட்டு நீங்கி, நிலத்திணை, இயங்குதிணை ஆகிய இருவகைப்பட்ட எல்லா உயிர்களும் வருத்தமுற கங்கைக் கரையை, அடைந்தான்.

பரதனொடு சென்ற சேனையுள் யானையின் மிகுதி

எண்ணரும் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெம் கரி மதம் அத்து அருவி பாய்தலால்
உண்ணவும் குடையயும் உரித்து அன்று ஆயதே .2

உரை

கண் அகன் -**இடம் அகன்ற**; பெரும் புனல் -**மிக்க நீரை உடைய**; கங்கை -**கங்கையாறு**; அண்ணல் - **பெருமையுடைய**; வெங்கரி - **கொடிய யானைகளின்**; மதத்து அருவி -**மத நீர்ப் பெருக்காகிய அருவி**; எங்கணும் பாய்தலால் -**எல்லா இடங்களிலும் பாயப் பெறுதலால்**; எண்ண அரும் சுரும்பு தம் இனத்துக்கல்லது - **கணக்கிட முடியாத வண்டுக் கூட்டங்களுக்கெல்லாமல் (ஏனைய உயிர்களுக்கு)**; உண்ணவும் -**குடிக்கவும்**; குடையவும் -**குளித்து மூழ்கவும்**; உரித்தன்று ஆயது - **உரிமையுடையதல்லாததாக ஆயிற்று.**

இடம் அகன்ற அதிகளவு நீரை உடைய கங்கையாறு, பெருமையுடைய கொடிய யானைகளின் மதநீர்ப் பெருக்காகிய அருவி எல்லா இடங்களிலும் பாய்ந்து ஓடுவதால், எண்ணிக் கணக்கிடுவதற்கு முடியாத வண்டுக் கூட்டங்களுக்கு அல்லாமல் ஏனைய உயிர்களுக்கு குடிக்கவும், குளித்து மூழ்கவும் உரிமையற்றது ஆகிவிட்டது.

குதிரைகளின் மிகுதி

அடி மிசைத் தூளி புக்கு அடைந்த தேவர்தம்
முடி உறப் பரந்தது; ஓர் முறைமை தேர்ந்திலேம்;
நெடிது உயிர்த்து உண்டவும் நீந்தி நின்றவும்
பொடி மிசைப் புரண்டவும் **புரவி** ஈட்டமே .3

உரை

அடிமிசைத் தூளி புக்கு **அடியின் மேல் எழுந்த (குதிரைகளின்) - தூசிபுகுந்து (அமரருலகத்தில்)**; அடைந்த தேவர்தம் -**அங்கே உள்ள தேவர்களது**; முடி உற -**தலைமீது படும்படி**; பரந்தது **தேவருலகு) - முழுமையும் ((ஆகிய) பரவியது**; ஓர் முறைமைதேர்ந்திலெம் - **ஒரு தன்மையை மனிதராகிய (அனுமானிக்க முடிகிறதன்றி) (எம்மால்) ஆராய்ந்தறிய இயலவில்லை**; நெடிது உயிர்த்து உண்டவும் - **பெருமூச்சு விட்டு பருகியவையும்(நீரைப்)**; நீந்தி நின்றவும் **நீந்திக்கொண்டு (நீரில்) - இருந்தவையும்**; பொடிமிசைப் புரண்டவும் - **மண்ணில் விழுந்து புரண்டவையும்**; (எல்லாம்புரவி ஈட்டமே (-**குதிரைத் தொகுதிகளே. (வேறில்லை(**

குதிரைகளின் காலடிகளால் மேலெழுந்த தூசி தேவருலகத்தில் புகுந்து, அங்குள்ள தேவர்களின் தலைகள் மீது படும் படியாகத் தேவருலகம் முழுவதும் பரவியது. இத்தகு இயல்பினை அனுமானிக்க முடிவதேயன்றி, ஆராந்தறிய எம்மால் முடியவில்லை. பெருமூச்சு விட்டு நீரைப் பருகியவை, நீரில் நீந்திக் கொண்டு இருந்தவை, மண்ணில் விழுந்து புரண்டவை எல்லாம் குதிரைத் தொகுதிகளே ஆகும்.



காலாட்படையின் மிகுதி

பாலை ஏய் நிறத்தொடு பண்டு தான் படர்
ஓலை ஏய் நெடுங்கடல் ஓடிற்று இல்லையால்;
மாலை ஏய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்தது அக் கங்கை வெள்ளமே .4

உரை

அக் கங்கை வெள்ளம் -**அந்தக் கங்கையாற்றின் நீர்ப் பெருக்கு**; பாலை ஏய்நிறத்தொடு -**பால் ஒத்த வெண்மை நிறத்துடன்**; தான் பண்டு படர் - **தான் முன்புசென்று சேர்கின்ற**; ஓலை ஏய் நெடுங்கடல் - **ஆரவாரம் பொருந்திய நீண்ட கடலின்கண்**; ஓடிற்று இல்லை - **சென்று கலந்தது இல்லை**; (ஏன் எனில் மாலை ஏய் நெடுமுடி (- **பூமாலை பொருந்திய நீண்ட மகுடத்தை உடைய**; மன்னன் சேனை ஆம் வேலையே -**பரதனது சேனையாகிய கடலே**; மடுத்தது -**உண்டு விட்டது.**

அக் கங்கையாற்றின் நீர்ப் பெருக்கு, பாலினை ஒத்த வெண்மை நிறத்துடன் தான் முன்பு சென்று சேர்கின்ற ஆராவாரம் மிக்க கடலினிடத்தில் சென்று கலந்ததில்லை. ஏனெனில், பூமாலை பொருந்திய நீண்ட மணிமுடியைச் சூடிய இளவரசனாகிய பரதனது சேனையாகிய கடல், அதனை உண்டு விட்டது.

பரதன் பின் சென்ற படையின் அளவு



கான்தலை நண்ணிய காளை பின் படர்
தோன்றலை அவ் வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய **அக்குரோணிகள்**
மூன்று பத்தாயிரத்து இரட்டி முற்றுமே .5

உரை

கான் தலை நண்ணிய **-காட்டிடத்திற் சென்ற**; காளை பின்படர் - **இராமன்பின்னே சென்ற (இராமனை நாடிச்)**; தோன்றலை **-பரதனை**; அவ்வழி - **அந்த வழியிலே**; தொடர்ந்து சென்றன **-பின்பற்றிச் சென்ற சேனைகள்**; முற்றும் -; ஆன்றவர் உணர்த்திய - **பெரியோர்களால் கணக்கிட்டு உணர்த்தப்பெற்ற**; மூன்று பத்து ஆயிரத்து இரட்டி - **அறுபதினாயிரம்**; அக்குரோணிகள் **-அக் குரோணிகள் ஆகும்.**

காட்டினிடத்தே சென்ற இராமன் பின்னே அவனை நாடிச் சென்ற பரதனை அந்த வழியிலே பின் தொடர்ந்து சென்ற சேனைகள் முழுவதும் பெரியோர்களாற் கணக்கிட்டு உணர்த்தப் பெற்ற அறுபதினாயிரம் அக்குரோணிகள் ஆகும்.

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
‘துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது ‘என்று எடுத்த சீற்றத்தான் .6

உரை

அப்படை **-அந்தச் சேனை**; கங்கையை அடைந்த ஆயிடை - **கங்கைக் கரையைநெருங்கிய அச்சமயத்தில் அது) (கண்டு‘குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்’** (2309); இப்படை எடுத்தது **-இந்தச் சேனை புறப்பட்டது**; துப்பு உடைக் கடலின் நீர் சுமந்தமேகத்தை **-பவளம் உடைய கடலிலிருந்து நீரை முகந்து சூல் கொண்ட கரு மேகத்தை**; ஒப்பு உடை அண்ணலோடு **-உவமையாகப் பெற்ற கரிய திருமேனியுடைய இராமபிரானோடு**; உடற்றவேகொல் **-பேர்செய்வதற்காகவேயோ**; என்று **-எனக் கருதி**; எடுத்தசீற்றத்தான் - **மேல் எழுந்த கோபம் உடையவனாய் தென்கரை வந்து தோன்றினான்**) 2313.)

அந்த சேனை கங்கையாற்றின் வட கரையை நெருங்கிய அச் சமயத்தில் இந்தச் சேனை புறப்பட்டதன் நோக்கம், பவளமுடைய கடலிலிருந்து நீரை முகந்து சூலுற்ற கருமேகத்தை உவமையாகப் பெற்ற திருமேனியையுடைய இராமபிரானோடு போர் செய்வதற்காகவோ? எனக் கருதி மேலெழுந்த கோபமுடையவனாய்க் கங்கையின் தென்கரையில் வந்து தோன்றினான்.

படை வரக் கண்ட குகன் நினைவும் செயலும்

குகன் எனும் பெயரிய **கூற்றின் ஆற்றலான்**
தொகை முரண் **சேனையைத் துகளின் நோக்குவான்**
நகை மிகக் கண்கள் தீ நாற நாசியில்
புகை உறக் குனிப்புறும் **புருவப் போர் விலான்** .7

உரை

குகன் எனப் பெயரிய **-குகன் என்ற பெயரை உடைய**; கூற்றின் ஆற்றலான் **-யமனை ஒத்த பராக்கிரமத்தை உடைய வேடர் தலைவன்**; தொகை முரண் சேனையை - **கூட்டமாக உள்ள வலிமை படைத்த (பரதன்) சேனையை**; துகளின் நோக்குவான் **-ஒரு தூசி போலப்பார்ப்பவனாய்**; நகை மிக **சிரிப்பு (இகழ்ச்சிச்)** -

அதிகமாக; கண்கள் தீ நாற - **கண்களிலிருந்து நெருப்புத் தோன்ற**; நாசியில் புகை உற **உள்ளே) - எரியும் கோபநெருப்பால்மூக்கிலிருந்து புகை வெறிவர (**; குனிப்புறும் - **(கோபத்தால்மேலேறிவளைந்த (**; புருவப் போர்விலான் - **புருவமாகிய போர்க்குரிய வில்லை உடையனானான்.**

குகன் என்ற பெயரையுடைய, இயமனை ஒத்த வீர பராக்கிரமத்தையுடைய தலைவன், கூட்டமாயுள்ள வலிமைமிக்க சேனையை ஒரு தூசி போலப் பார்ப்பவனாய், இகழ்ச்சிச் சிரிப்பு மிகுந்திட, கண்களில் கோபத்தினால் நெருப்புத் தோன்ற, மூக்கிலிருந்து புகை வெளிவர, மேல் வளைந்த புருவமாகிய போர்க்குரிய வில்லை உடையவனானான்.

மை உறவு உயிர் எலாம் இறுதி வாங்குவான்
கை உறு கவர் அயில் பிடித்த **<u>காலன்தான்</u>**
<u>ஐ ஐநூறாயிரம் உருவம் ஆயின</u>
மெய் உறு தானையான் வில்லின் கல்வியான் .8

<u>உரை</u>

மைஉற **-தீமை உண்டாக**; இறுதி உயிர் எலாம்வாங்குவான் - **இறுதி நாள் வந்த பொழுது உயிர்கள் எல்லாவற்றையும் அவற்றின்) உடலிலிருந்துவாங்குகின்ற (**; கை உறுகவர் அயில் பிடித்தகாலன் தான் - **கையிற் பொருந்தி முக்கிளையாகப் பிரியும் சூலத்தை ஏந்திய யமனே**; ஐ **-அழகிய**; ஐ நூறாயிரம் உருவம் ஆயின **-ஐந்து இலட்சம் வடிவம் எடுத்தாற் போன்ற**; உறு மெய் தானையான் **-வலிய உடம்புடைய சேனையை உடையவன்**; வில்லின் கல்வியான் - **வில்வித்தையில் தேர்ந்தவன்**.

தீமை உண்டாக. இறுதி நாள் வந்தபோது உயிர்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கின்ற கையில் பொருந்தி மூன்று கிளைகளாகப் பிரியும் சூலத்தை ஏந்திய இயமனே அழகிய ஐந்து இலட்சம், வடிவங்கள் எடுத்தாற்போன்ற வலிய உடம்பினையுடைய சேனையை உடையவன், வில்வித்ததையில் தேர்ந்தவன்.

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
'கிட்டியது அமர் 'எனக் கிளரும் தோளினான் .9

<u>உரை</u>

கட்டிய **கட்டப்பெற்றுள்ள (இடைக்கச்சில்) -**; கரிகையன் - **உடையவாளை உடையவன்**; கடித்த வாயினன் - **(பற்களால்)உதட்டைக் கடித்துக் கொண்டிருப்பவன்**; வெட்டிய மொழியினன் **-கடுமையாகப் பேசும் சொற்களை உடையவன்**; விழிக்கும் தீயினன் **விழித்துப் (கண்கள்) - பார்க்கும் நெருப்புத் தன்மை உடையவன்**; கொட்டிய துடியினன் - **அடிக்கப் பெரும் உடுக்கையை உடையவன்**; குறிக்கும் கொம்பினன் - **(போர் (குறித்து ஒலிக்கப் பெறும் ஊது கொம்பினை உடையவன்**; 'அமர் கிட்டியது' - **'போர் அருகில்வந்துவிட்டது'**; எனக் கிளரும் தோளினான் - **என்று கருதி மகிழ்ச்சியால் மேல் எழும்பும்தோள்களை உடையவன் (..ஆகி) (வரும் பாடலில் முடியும்.(**

இடைக்கச்சியில் கட்டப்பட்டுள்ள உடைவாளினையும், பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டிருக்கும் வாயினையும், கடுமையாகப் பேசும் சொற்களையும், கண்கள் விழித்துப் பார்க்கையில் நெருப்புத் தன்மையையும், அடிக்கப்படும் உடுக்கையையும், போர் குறித்து ஒலிக்கப்பெறும் ஊது கொம்பினையும், ''போர் அருகில் நெருங்கி வந்து விட்டது'' என்று கருதி மகிழ்சியால் மேல் எழும்பும் தோள்களையும் உடையவனாகி..



<u>'எலி எலாம் இப்படை; அரவம் யான்'</u> என
ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்;
<u>வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்</u>
<u>புலி எலாம் ஒரு வழி புகுந்த போலவே</u> .10

உரை

‘இப்படை எலாம் எலி -**இந்தச் சேனை முழுவதும் (பரதன்) எலிகளாகும்**; யான்அரவம் - **‘யான் இந்த எலிகளைத் தின்றொழிக்கும் பாம்பாவேன்’**;என -**என்று வீரவார்த்தை பேசி**; வலி உலாம் - **வலிமை நிரம்பிய**; உலகினில் வாழும் - **உலகத்தில் வசிக்கின்ற**; வள் உகிர்ப் புலி எலாம் -**வளவிய நகத்தை உடைய புலிகள்எல்லாம்;** ஒரு வழிப் புகுந்த போல -**ஒரே இடத்தில் வந்து சேர்ந்தன என்று சொல்லும்படி உள்ள**; ஒலி உலாம் சேனையை **சேனையை (வேட்டுவச்)ஆர்ப் பொலி மிகுந்த (தனது)** -; உவந்து கூவினான் - **மகிழ்ச்சியால் .(ஆகி).அழைத்தன (போகுக்கு)**

இந்தச் சேனைகள் யாவும் எலிகளாகும், யான் இந்த எலிகளைத் தின்றொழிக்கும் பாம்பாவேன் என்று வீர வார்த்தை பேசி, வலிமை நிரம்பிய உலகத்தில் வாழுகின்ற வன்மையான கூரிய நகத்தையுடை புலிகள் எல்லாம் ஒரே இடத்தில் வந்து சேரந்தன என்று சொல்லும் படியாக ஆரவாரம் மிக்க சேனையை மகிழ்ச்சியுடன் அழைத்தனன்.

மருங்கு அடை தனென் கரை வந்து தோன்றினான்;
ஒருங்கு அடை நெடும் படை ஒல் என் ஆர்ப்பினோடு
அருங் கடை யுகம் தனில் அசனி மா மழை
கருங்கடல் கிளர்ந்து என கலந்து சூழவே .11

உரை

ஒருங்கு அடை நெடும் படை -**ஒன்று சேர்ந்து வந்த பெரிய (வேட்டுவச்சேனை (**; அருங் கடை உகம்தனில் - **அரிய கடையூழிக் கூலத்தில்**; அசனி மா மழை -**இடியோடுகூடிய மேகமும்**; கருங்கடல் - **கரிய கடலும்**; கிளர்ந்து என **மிக்குஎழுந்தார் போல (ஒலித்து)** -; கலந்து சூழ -**ஒன்று சேர்ந்து தன்னைச் சுற்றிவர**; மருங்கு அடை- **பக்கத்தில் உள்ள**; தென்கரை **தெற்குக் கரையில் (கங்கையாற்றின்)** -; வந்து தோன்றினான் **குகன்) - (என முடிக்க**

ஒருங்கு சேர்ந்து வந்த பெரிய சேனை, அரிய கடையூழிக் காலத்தில் இடியோடு கூடிய மேகமும், கரிய கடலும் மிக்கு எழுந்தாற் போல ‘‘ஒல்’’ என்னும் போராரவாரத்தோடு ஒன்று சேர்ந்து தன்னைச் சுற்றி வர குகன் பக்கத்தில் உள்ள தெற்குக் கரையில் வந்து தோன்றினான்.



குகன் தன் படையினர்க்கு இட்ட கட்டளை

தோன்றிய புளிஞரை நோக்கிச் ‘சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென்; என் உயிர் துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேர் அரசு; நீர் அமைதிர் ஆம் ‘என்றான் .12

உரை

(தென்கரை வந்து சேர்ந்த குகன்- தோன்றிய புளிஞரை நோக்கி (**(தென்கரையில்தன்னால் அழைக்கப்பட்டுத் தன் முன் வந்து (தோன்றிய வேடர்களைப் பார்த்து**; ‘ஆன்ற பேர்அரசு -**நிரம்பிய பெரிய அரசாட்சியை**; என் உயிர்த் துணைவற்கு -**என் உயிர்போலச் சிறந்த தோழனாகிய இராமனுக்கு**; ஈகுவான் -**தருவதற்காக**; சூழ்ச்சியின்ஊன்றிய சேனையை **அதனை) - ஆலோசனையோடு (அவன் பெறாமல் தடுக்கும் எதிரில் (இப்பரதனது) கால் ஊன்றி நிற்கும்(வடகரையில்) சேனையை**; உம்பர் ஏற்றுதற்கு **வீரசுவர்க்கத்தே செல்ல (போரில்தொலைத்து) - விடுதற்கு**; ஏன்றனென் - **தொடங்கியுள்ளேன்**; நீர் அமைதி ஆம்’ - **நீங்களும் இதற்கு உடன்படுவீர்களாக**; என்றான் - **என்றுசொன்னான்**.

தன்னால் அழைக்கப்பட்டு தன் முன் வந்துநிற்கும் வேடர் சேனையினரை நோக்கி, நிரம்பிய பெரிய அரசாட்சியை, என் உயிர் போலச் சிறந்த தோழனாகிய இராமனுக்குத் தருவதற்காக, அதனைத் தடுக்கும் ஆலோசனையுடன் வடகரையில் காலூன்றி நிற்கும் பரதனின் சேனையைப் போரில் கொன்று வீர சுவர்க்கம் செல்ல விடுவதற்கு தொடங்கியுள்ளேன். நீங்களும் இதற்கு உடன்படுவீர்களாக என்று சொன்னான்.

"துடி எறி; நெறிகளும் துறையும் சுற்றுற
ஒடி எறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடி எறி; கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி; எறி பட " எனப் பெயர்த்தும் கூறுவான் .13

உரை

'துடிஎறி **-போர்ப் பறைகளை அடியுங்கள்**; நெறிகளும்துறையும் - **வருவதற்குரிய வழிகளையும் ஏறுதற்குர (தென்கரையில்)ிய துறைகளையும்**; ஓடியெறி **-அழித்துநீக்கி, இல்லாமல் செய்யுங்கள்**; அம்பிகள்யாதும் ஒட்டலிர் - **தோணிகளுள் ஒன்றையும் ஓட்டாதீர்கள் (கங்கையில்)**; கடிஎறி கங்கையின் - **விரைந்து அலைவீசி வருகின்ற கங்கையாற்றின்**; கரை வந்தோர்களை **-தென்கரைக்கு தரமாக) வந்தவர்களை(முயன்று**; பிடி- **பிடியுங்கள்**; பட எறி' - **இறக்கும்படி அழியுங்கள்**; எனா **-என்று (குகன்) கூறி**; பெயர்த்தும் **-மேலும்**; கூறுவான் **-சில வீரவார்த்தைகளையும் சொல்லுவான் ஆனான்**.

வருவதற்குரிய வழிகளையும், துறையையும் அழித்து நீக்கிச் சூழலில் இல்லாமற் செய்யுங்கள்: தோணிகளில் ஒன்றையும் ஓட்டாதீர்கள். விரைந்து அலைவீசி வரும் கங்கையாற்றின் தென்கரைக்கு வந்தோர்களைப் பிடியுங்கள். அவர்களை இறக்கும்படி அழியுங்கள் என்று குகன் கூறி, மேலும் சில வீர வார்த்தைகளைச் சொல்லலுற்றான்.

குகன் மீட்டும் கூறல்

அஞ்சன வண்ணன், என் ஆர் உயிர்
நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன,
செல்லாவோ?
உஞ்சு இவர் போய்விடின், **"நாய் குகன்"**
என்று எனை ஓதாரோ? 14



உரை

'என் ஆருயிர் நாயகன் **-என் அரிய உயிர்த் துணைவனாகிய**; அஞ்சனவண்ணன் **-மை போலும் கரிய நிறமான திருமேனி அழகனாகிய இராமபிரான்**; அரசு ஆளாமே **-ஆட்சிஉரிமை எய்தாதபடி**; வஞ்சனையால் **-சூழ்ச்சியால்**; எய்திய - **(அவ்வரசாட்சியைக் கைப்பற்றி) அடைந்த**; மன்னரும் - **அரசரும் (பரதரும்)**; வந்தாரே **இதோ) - என்னருகில் (!வந்துள்ளார்கள் அன்றோ**; தீ உமிழ்கின்றனசெஞ்சரம் - **நெருப்பைக் கக்குகின்றனவான சிவந்த (என்)அம்புகள்**; செல்லாவோ - **(இவர்கள் மேற்செல்லாமல் போய்விடுமோ (?**; இவர் உஞ்சு போய்விடின் - **இவர்கள் (என் அம்புக்குத் தப்பிப்) இராமன் இருக்கும்) பிழைத்து இடத்துக்குப்போய்விட்டால் (**; 'நாய்க்குகன்' என்று **குகன் (உலகோர்) - றாய் போன்ற கீழ்த்தன்மை உடையவன் என்று**; எனை **-என்னைப் பற்றி**; ஓதாரோ' - **சொல்லாமல் இருப்பார்களா? (தொடரும்(**

என் அரிய உயிர்த் துணைவனாகிய, மைபோலும் கரிய நிற மேனி அழகனாகிய இராமபிரான் ஆட்சியுரிமை எய்தாதபடி சூழ்ச்சியால் அவ்வரசாட்சியை கைப்பற்றிய அரசரும் வந்துள்ளார் அன்றோ! நெருப்பைக் கக்குகின்றனவாய என் சிவந்த அம்புகள் செல்லாமல் போய்விடுமோ? இவர்கள் பிழைத்து இராமன் இருக்கும் இடம் போய் விட்டால், உலகோர் நாய் போன்ற கீழான குணமுடையவன் என்று என்னைப்பற்றி சொல்லாமல் இருப்பார்களா?

ஆழ நெடுந்திரை ஆறு
கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு
விலங்கிடும் வில்லாளோ?
தோழமை என்று அவர் சொல்லிய
சொல் ஒரு சொல் அன்றோ?
'ஏழைமை வேடன் இறந்திலன் '
என்று, எனை ஏசாரோ? 15

உரை

'இவர் - இவர் ; ஆழம் **-ஆழத்தையும்**; நெடுந் திரை **-நீண்ட பெரிய அலைகளையும் உடைய**; ஆறு - **கங்கையாற்றை**; கடந்து **-தாண்டி**; போவாரோ **-அப்பால் செல்வார்களா (தென்கரைப் பகுதிக்குச்)? (மாட்டார்(**; வேழ நெடும்படை **-யானைகளை உடைய நீண்ட பெரிய சேனையை**; கண்டு **-பார்த்து (பயந்து)**; விலங்கிடும் **-புறமுதுகு காட்டி விலகிச் செல்லுகின்ற**; வில் ஆளோ **-வில் வீரனோ (நான்)**; 'தோழமை' என்று - **நட்பு என்பதாக (உனக்கும் எனக்கும்)**; அவர் சொல்லிய சொல் - **அந்த இராமபிரான் சொல்லிய வார்த்தை**; ஒரு சொல் அன்றோ - **(காப்பாற்ற,மதிக்கப்பட வேண்டியஒப்பற்ற வார்த்தை அல்லவா (? (அந்நட்புக்கு மாறாக இவர்களைப்போகவிட்டால்(**; ஏழைமை வேடன் - **அற்பனாகிய இந்த வேடன்**; இறந்திலன் - **இவ்வாறு) இராமனோடு நட்புச் செய்து, இப்பொழுது சேனைக்குப் பயந்து இராமனை எதிர்க்கும் பரதனோடு நட்பாய் மானங்கெட்டு வாழ்தலைவிடஇறக்கலாமே (, அது தானும் செய்தானிலனே**; என்றுஎனை ஏசாரோ - **என்றிவ்வாறு உலகத்தார் என்னைப் பழியாமல் விடுவார்களா (தொடரும்)(பழிப்பர்) -**

நீண்ட அலைகளை உடைய கங்கை ஆற்றைக் கடந்து அப்பாற் செல்வார்களோ? யானைகளை உடைய நீண்ட பெரும் சேனையைப் பார்த்துப் பயந்து புறமுதுகு காட்டிச் செல்கின்ற வில் வீரனோ நான்? உனக்கும் எனக்கும் நட்பு என்பதாக அந்த இராமபிரான் கூறிய வார்த்தை ஒப்பற்ற வார்த்தை அல்லவா? அற்பனாகிய இந்த வேடன் இவ்விதம் மானமழிந்து வாழ்வதைவிட இறந்து போகலாமே! என்று உலகத்தார் என்னைப் பழியாது விடுவார்களோ?



முன்னவன் என்று நினைந்திலன்;
மொய் புலி அன்னான், ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது?
இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர்
விடும் சரம் வாயாவோ? 16

உரை

'இவன் **-இப் பரதன்**; "முன்னவன்" என்று நினைந்திலன் - **(இராமபிரானைக் குறித்துதன் அண்ணன் என்று (நினைந்தானில்லை**; "மொய் புலி அன்னான் ஓர் பின்னவன்நின்றனன்" - **வலிமை நெருங்கிய புலியை ஒத்த இளவலாகிய இலக்குவன் இராமனுக்குத் துணையாக உடன் உள்ளான்**; என்றிலன் **-என்று கருதினானும் இல்லை**; அன்னவை பேசானேல் - **அந்த இரண்டையும் பற்றி (இராம இலக்குவர்களாகிய) நினைக்காமல் விட்டாலும்**; என்னைஇகழ்ந்தது என் **இடையே கங்கைக்) - கரை யுடையஒரு பொருளாக) என்னையும் (இகழ்ந்தது என(மதியாமல் கருதி?**; இவ் எல்லை கடந்து அன்றோ **இவன் இராமன்பால்) - போர் செய்வதுஇந்த(எனது எல்லையைக் கடந்து சென்றால் அல்லவா?**; வேடர் விடும் சரம் - **வேடர்கள் விடுகின்ற அம்புகள்**; மன்னவர் நெஞ்சினில் **-அரசர்கள் மார்பில்**; வாயாவோ' - **தைத்து உள் நுழைய மாட்டாவோ?**

இப் பரதன், இராமபிரான் தனது அண்ணன் என்று நினைத்தானில்லை. வலிமை நெருங்கிய புலியினையொத்த இலக்குவன் அவனுக்குத் துணையாக உள்ளான் என்பதையும் கருதினானில்லை. அந்த இராம, இலக்குவணர்களைப்

பற்றி நினைக்காவிட்டாலும் என்னையும் ஒரு பொருட்டாக மதியாமல் இகழ்ந்தது எது கருதி? எனது எல்லையைக் கடந்து சென்றால் அல்லவா? வேடர்கள் விடுக்கின்ற அம்புகள் அரசர்களின் மார்புகளில் தைத்து உள் நுழைய மாட்டாவோ?

பாவமும் நின்ற பெரும்பழியும்
பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலகு
ஆள்பவர் எண்ணாரோ?
ஆஎன் ஆர் உயிர்த் !அது போக !
தோழமை தந்தான்மேல்
போவது, சேனையும் ஆர்
உயிரும் கொடு போயன்றோ? 17

உரை

மண் உலகு ஆள்பவர் **பூவுலகத்தை ஆள்கின்ற அரசர்கள் (இப்)** -; பாவமும் - **தாம் ஒரு செயலைச்) செய்கிறபோது அதனால் விளையும்(பாவத்தையும்**; நின்ற பெரும் பழியும் **(செயல்முடிந்த பிறகு அதனால்) - தம்மேல் நின்ற பெரும் பழியையும்**; பகை நண்போடும் - **பகைவர் இன்னார், நண்பர்கள் இன்னார் என்பவற்றையும்**; ஏவமும் **-விளையும்குற்றங்களையும்**; என்பவை **-என்று இதுபோலச் சொல்லப்படுபவைகளையும்**; எண்ணாரோ - **நினைக்கமாட்டார்களோ?**; ஆவது போக **-அது கிடக்கட்டும்**; என் ஆருயிர்த்தோழமை தந்தான் மேல் போவது **-எனக்கு அரிய உயிரோடொத்த நட்புறவைத் தந்தஇராமன்மேல் படையெடுத்துச் செல்வது**; ஆர் உயிரும் சேனையும் கொடு போயன்றோ **-தம்முடைய அரிய உயிரையும் சேனைகளையும்உடன் கொண்டு சென்ற (எனக்குத் தப்பி) பிறகல்லவா(முடியும்)?**

இப் பூவுலகத்தை ஆளுகின்ற அரசர்கள் பாவத்தையும் தம்மேல் நின்ற பெரும் பழியையும் பகைவர்கள், நண்பர்கள் யார்? யார்? என்பதையும் விளையும் குற்றங்களையும் இவை போலச் சொல்லப்படுவனவற்றையும் நினைக்கமாட்டார்களோ? அது கிடக்கட்டும், எனக்கு அரிய உயிரோடு ஒத்த நட்புறவைத் தந்த இராமன்மேல் படையெடுத்துச் செல்வது, தம்முடைய அரிய உயிரையும், சேனைகளையும் உடன் கொண்டு சென்ற பிறகல்லவா முடியும்.



அருந்தவம் என் துணை ஆள,
இவன் புவி ஆள்வானோ?
மருந்து எனின் அன்று உயிர்; வண் புகழ்
கொண்டு பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர்
தம்மொடு போகாதோ
இருந்ததும் நன்று கழிக்குவென்
என்கடன் இன்றோடே .18

உரை

என் துணை **-எனக்கு நண்பனாகிய இராமன்**; அருந் தவம் ஆள - **அரியதவத்தைச் செய்துகொண்டிருக்க**; இவன் இந்தப் பரதன் -; புவி ஆள்வானோ? - **உலகத்தை ஆட்சி செய்வானோ? (அதையும் பார்த்துவிடுவோம்(**; உயிர் **-என்னுடையஉயிர்**; மருந்து எனின் - **(கிடைத்தற்கரிய (தேவர் அமுதமோ என்றால்**; அன்று **-அல்ல நான்) அப்படி அதை அரிதாக எண்ணிப் பாதுகாக்க நினைக்க வில்லை(**; வண்புகழ்கொண்டு **அதனால் சிறந்த (இராமனுக்காகப் பரதனை எதிர்த்து) - புகழைப் பெற்று**; பின் மாயேனோ **-அதன் பிறகு உயிர் துறக்க மாட்டேனோ?**; பொருந்திய கேண்மை **-மிகவும் ஒட்டிய உறவை**; உகந்தவர் தம்மொடு **-என்பால் கொண்டு மகிழ்ந்த இராம இலக்குவர்களோடு**; போகாதே **-உடன் செல்லாமல்**; இருந்தது நன்று - **(நான்இங்கேயே தங்கியது நல்லதாய்ப் போயிற்று (**; என்கடன் **(நான்) - இராமனுக்குச் செய்ய வேண்டிய கடமையை**; இன்றோடு கழிக்குவென் - **இன்றைக்கே செய்து முடிப்பேன்.**

எனக்கு நண்பனாகிய இராமன் அரிய தவத்தைச் செய்து கொண்டிருக்க, இப்பரதன் உலகத்தை ஆட்சி செய்வானோ? ஏன்னுடைய உயிர் கிடைத்தற்கரிய தேவாமிர்தமோ என்றால் இல்லை. அதனால் சிறந்த புகழைப் பெற்று அதன் பிறகு உயிர் துறக்கமாட்டேனோ? மிகவும் ஒட்டிய நட்புறவை என்பால் கொண்டு மகிழ்ந்த இராம, இலக்குவர்களோடு உடன் செல்லாமல் இங்கேயே இருந்தது நல்லதாகப் போயிற்று. நான் இராமனுக்குச் செய்ய வேண்டிய கடைமையை இன்றைக்கே செய்து முடிப்பேன்.

தும்பியும் மாவும் மிடைந்த
பெரும்படை சூழ்வாரும்
வம்பு இயல் தார் இவர் வாள் வலி
கங்கை கடந்து அன்றோ?
வெம்பிய வேடர் உளீர்துறை !
ஓடம் விலக்கீரோ
நம்பி முன்னே இனி நம் உயிர்
மாய்வது நன்று அன்றோ? 19

உரை

தும்பியும் **-யானைகளும்**; மாவும் **-குதிரைகளும்**; மிடைந்த **- நெருங்கிய**; பெரும்படை **-பெரிய சேனையால்**; சூழ்வு ஆரும் **- சுற்றப்படுதல்பொருந்திய**; வம்பு இயல் தார் இவர் **-மணம் வீசுகின்ற மாலையணிந்துள்ள இவர்கள்**; வாள்வலி **-படையின் ஆற்றல்**; கங்கை கடந்து அன்றோ **-இக் கங்கையாற்றைக்கடந்து போன பிறகு அல்லவா (காட்டமுடியும்?)**; வெம்பிய வேடர் உளீர்**மனப் (இவர்களைக்கண்டு)** - ! **புழுக்கம் அடைந்துள்ள வேடர்களாய் உள்ளவர்களே!**; துறை ஓடம் விலக்கீரோ **-நீர்த்துறையிலே இவர்களுக்கு ஓடம் விடுவதை நிறுத்திவிடுங்கள்ஒருவேளை இவர் நம்மைத்) . தடுத்து மேற்செல்லும் ஆற்றல் உடையவராயினும் இவரோடு போரிட்டு(**; நம்பி முன்னே **- இராமபிரானுக்கு முன்னாலேயே**; நம் உயிர் மாய்வது **-நமது உயிர் அழிந்து போவது**; இனி நன்று அன்றோ? **- இனிமேல் நல்லது அல்லவா?**

யானைகளும், குதிரைகளும் நெருங்கிய பெரிய சேனையால் சூழப்படுதல் பொருந்திய, புதுமணம் வீசும் மாலையை அணிந்துள்ள இவரது வாளேந்திய படையினரின் ஆற்றலை இக் கங்கையை கடந்து போன பின் அல்லவா காட்ட முடியும் மனப்புளுக்கம் அடைந்துள்ள வேடர்களே கங்கை நீர்த்துறையில் இவர்களுக்கு ஓடம் விடுதலை நிறுத்தி விடுங்கள் இராமனுக்கு முன்னாலேயே நமது உயிர் போவது இனிமேல் நல்லதல்லவா?



போன படைத் தலை வீரர்
தமக்கு இரை போதா இச்
சேனை கிடக்கிடு; தேவர் வரின்,
சிலை மா மேகம்
சோனை படக் குடர் சூறை
பட சுடர் வாேளாடும்
தானை படத் தனி யானை
படத் திரள் சாயேனோ .20

உரை

போன **வந்துள்ள (நம்முடன்)** -; படைத்தலை வீரர் தமக்கு **- சேனையின் கண் உள்ள வீரர்களுக்கு**; இரை போதா **(ஒருவேளைப்) - போர்க்கும் பற்றாத**; இச்சேனை **-இந்தப் சேனை (பரதனது)**; கிடக்கிடு **- கிடக்கட்டும்**; தேவர்வரின் **-தேவர்களே வந்தாலும் (படையெடுத்து)**; சிலை மா மேகம் **-என் வில்லாகிய கரிய மேகம்**; சோனை பட **- அம்பு மழையைச் சொரிய**; குடர் சூறைபட **- எதிரிகளது குடர்கள் சிதைந்து அலைய**; தானை சுடர்வாளோடும் பட **-எதிரிச் சேனைகள்தம்கையிற் பிடித்த படைக்கலங்களோடும் இறக்க**; தனி யானை பட **- ஒப்பற்ற யானைகள்அழிய**; திரள் சாயேனோ **(அப்படைக்) - கூட்டத்தை நிலைகுலைக்காமல் விடுவேனோ?**

வந்துள்ள சேனையிலுள்ள வீரர்களுக்கு ஒரு வேளைப் போருக்கும் காணாத இப் பரதனின் சேனை கிடக்கட்டும். தேவர்களே படையெடுத்து வந்தாலும் என் வில்லாகிய கரிய மேகம் அம்பு மழையைச் சொரிய எதிரிகளின் குடல்கள் சிதைந்து அழிய எதிர்ப் படைகள் தம் கைகளிற் பிடித்த வாள்களோடும் இறந்துவிட, ஒப்பற்ற யானைகளும் அழிய, கூட்டத்தை நிலை குலையச் செய்யாமல் விட்டு விடுவேனோ?

நின்ற கொடைக் கை என் அன்பன்
உடுக்க, நெடுஞ் சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர்
பலத்தை, என் அம்பாலே
கொன்று குவித்த நிணம் கொள்
பிணக் குவை கொண்டு ஓடித்
துன்று திரைக் கடல், கங்கை
மடுத்து இடை தூராதோ? 21

உரை

அன்று **அந்நாள் (முடிசூட்டு விழா நிகழ இருந்த)** -; கொடை நின்ற கை **முடிசூட்டுவதற்கு முன்பு)** - **செய்யவேண்டிய தானம் முதலியவற்றைச் செய்துநின்ற திருக்கரங்களை உடைய (**;என் அன்பன் - **என் அன்பிற்குரிய இராமன்**; நெடுஞ் சீரை உடுக்க - **பெரிய மரவுரியை உடுக்குமாறு**; கொடுத்தவள் **(அவனுக்குக்)** - **கொடுத்தவளாகிய கைகேயியின்**; மைந்தர் பலத்தை **-மகனார் ஆன பரதன் சேனையை**; என்அம்பால் கொன்று குவித்த **-என்னுடையஅம்பினால் கொன்று குவியல் செய்த**; நிணம்கொள் பிணக்குவை **-கொழுப்பு மிகுதி கொண்ட பிணங்களின் திரட்சியை**; கங்கை **-இந்தக் கங்கா நதி**; கொண்டுஓடி **-இழுத்துக் கொண்டு விரைந்து சென்று**; துன்று திரைக்கடல் **-நெருங்கியஅலைகளை உடைய கடலில்**; மடுத்து **-அவற்றைச் சேர்த்து**;இடை தூராதோ? - **அக்கடல் இடத்தைத் தூர்த்து விடாதோ? (தூர்த்துவிடும்(**

அந்நாள் திருக்கரக் கரங்களையுடைய எனது அன்பிற்குரிய இராமன் பெரிய மரவுரியை உடுக்கும் நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்தவனாகிய கைகேயியின் மைந்தரான பரதன் சேனையை, என் அம்பால் கொன்று குவியல் செய்த, கொழுப்பு மிகுந்த பிணங்களின் திரட்சியை, இந்த கங்கையாறானது இழுத்துக் கொண்டு விரைவாக ஓடி, நெருங்கிய அலைகளை உடைய கடலில் அவற்றைச் சேர்த்து, அக்கடலினிடத்தைத் தூர்த்து விடாதோ?

"ஆடு கொடிப் படை சாடி,
அறத்தவரே ஆள
வேடு கொடுத்தது, பார் '' எனும்
இப் புகழ் மேவீரோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு
இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி,
எடுத்தது காணீரோ? 22



உரை

ஆடு **-அசையும்**; கொடி **-கொடிகளை உடைய**; படை - **சேனைகளை**; சாடி - **கொன்றழித்து**; அறத்தவர் ஆள - **தருமத்தின் துணைவர்களாய இராமஇலக்குவர்கள் ஆளும்படி**; வேடு **-வேடர்கள்**; பார் கொடுத்தது **பூமியை மீட்டுக் கொடுத்தனர்(இந்தப்)** -; எனும் இப்புகழ் மேவீர் **-என்கின்ற இந்தப் புகழைஅடையுங்கள்**; நாடு கொடுத்த என் நாயகனுக்கு **(இவர்கள் ஆளும்படி)** - **தான் ஆட்சியுரியவேண்டிய நாட்டைக் கொடுத்துவிட்டு வந்த என் தலைவனாகிய இராமனுக்கு**; இவர் - **இந்தப்பரதர்**; நாம் ஆளும் காடு **-நாம் ஆட்சி செயும் நமக்கு உரிமையாகிய இந்தக்காட்டையும்**; கொடுக்கிலர் ஆகி **-ஆட்சி செய்ய மனம் பொறாதவராய**; எடுத்தது **-படை எடுத்து வந்த படியை**; காணீர் **-காணுங்கள்.**

அசையும் கொடிகளையுடைய சேனைகளைக் கொண்டழித்து, தருமத்தின் துணைவர்களான இராம, இலக்குவணர்கள் ஆளும்படி வேடுவர்கள் பூமியை மீட்டுக் கொடுத்தனர் என்ற இப் புகழை அடையுங்கள். தான் ஆட்சிபுரிய வேண்டிய நாட்டைக் கொடுத்துவிட்டு வந்த என் தலைவனாகிய இராமனுக்கு, பரதனாகிய இவர் நாம் ஆட்சி செய்யும் நமக்குரிமையாகிய இந்தக் காட்டையும் ஆட்சி செய்யும்படி கொடுக்க மனமில்லாதவராகி படையெடுத்து வந்துள்ளதைக் காணுங்கள்.



மா முனிவர்க்கு உறவு ஆகி,
வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று,
மனத்து இறை கொள்ளாதே,
ஏ முனை உற்றிடில், ஏழு
கடல் படை என்றாலும்
ஆ முனையின் சிறு கூழ் என
இப்பொழுது ஆகாதோ? 23

உரை

'மா முனிவர்க்கு **-பெரிய தவசிகளுக்கு;** உறவாகி - **இனிய சுற்றமாகி;** வனத்திடையே வாழும் **-காட்டிடத்தில் வாழும்;** கோ - **இராமன்;** முனியத் தகும்'- **(தன் தம்பியான பரதனை எதிர்த்தால் என்னை(வெறுத்துக் கோபிப்பான்;** என்று -; மனத்துஇறை கொள்ளாது - **மனத்தின்கண் சிறிதும் நினையாமல்;** ஏ முனை உற்றிடில் - **போர்முனையில் சென்று சந்தித்துப் போரிட்டால் (பரதனைச்);** இப்பொழுது - **இந்நேரத்தில்;** ஏழு கடற் படை என்றாலும் **-ஏழு கடல் அளவு சேனை என்றாலும்;** ஆ முனையின் சிறு கூழ் என **-பசு தின்பதற்கு முனைந்தவழி அதன் எதிரில் கிடந்த சிறிய புல்என்று சொல்லும்படி;** ஆகாதோ **-அனைத்தும் அழிந்து போகாதோ (.போகும்)**

பெரிய தவசிகளுக்கு இனிய சுற்றமாகிக் காட்டினிலே வாழும் இராமன் வெறுத்துக் கோபிப்பான் என மனதின் கண் சிறிதும் நினைக்காமல், போர் முனையில் சந்தித்துப் போரிட்டால், இந் நேரத்தில் ஏழு கடலளவு சேனைகள் என்றாலும் பசு, உண்ணும் பொருட்டு முயல்கையில், அதன் எதிரில் கிடந்த சிறிய புல் என்று சொல்லும் படி அனைத்தும் அழிந்து போகாதோ?

சுமந்திரன் பரதனிடம் குகன் தன்மை சொல்லல்

என்பன சொல்லி, **இரும்பு அன**
மேனியர் ஏனோர் முன்
வன் பணை வில்லினன், மல் உயர்
தோளினன், வாள் வீரற்கு
அன்பனும், நின்றனன்; நின்றது
கண்டு, **அரி ஏறு அன்ன**
முன்பனில் வந்து, மொழிந்தனன்
மூரிய தேர் வல்லான் .24

உரை

வன் பனை வில்லினன் **-வலிய கட்டமைந்த பருத்த வில்லை உடையவனும்;** மல்உயர் தோளினன் **-மல் தொழிலால் சிறப்புற்ற தோளை உடையவனும்;** வாள் வீரற்குஅன்பனும் **-வாளாற் சிறந்த வீரனாகிய இராமனுக்கு அன்பு பூண்டவனும் ஆய குகன்;** இரும்பு அனமேனியர் ஏனோர்முன் **-இரும்பை ஒத்த வலிய உடம்பை உடைய வேடுவ வீரர்களுக்கு முன்னால்;** என்பன சொல்லி **-என்ற இச் சொற்களைச் சொல்லி;** நின்றனன் -; நின்றது கண்டு **நின்ற (குகன்) - படியைப் பார்த்து;** மூரிய தேர்வல்லான் **-வலிய தேரைஓட்டுதலில் வல்லவனாகிய சுமந்திரன்; அரி ஏறு அன்ன முன்பனில் ஆண் சிங்கத்தை ஒத்த வலிமை படைத்த பரதனுக்கு முன்னால்;** வந்து மொழிந்தனன் **-வந்து சிலசொற்களைக் கூறுவானானான்.**

வலிய கட்டமைந்த பருத்த வில்லினை உடையவனும், மல் யுத்தத் தொழிலால் சிறப்புற்ற தோளினை உடையவனும், வாள் வலிமையிற் சிறந்த இராமபிரானுக்கு அன்பு பூண்டவனும் ஆகிய குகன், இரும்பினை ஒத்த வலிமையுடைய ஏனைய வேடுவ வீரர்களுக்கு முன்னால் இத்தகைய வீர வார்த்தைகள் பலவற்றைக் கூறி நின்றான். குகன் நின்ற கோலத்தைப் பார்த்து, வலிய தேரை ஓட்டுதலில் வல்லவனாகிய சுமந்திரன், ஆண் சிங்கத்தை ஒத்த வலிமை படைத்த பரதனுக்கு முன்னால் வந்து நின்று சில சொற்களைக் கூறலுற்றான்.



"கங்கை இருகரை உடையான்,
கணக்கு இறந்த நாவாயான்,
உங்கள் குலத் தனி நாதற்கு
உயிர் துணைவன், உயர் தோளான்,
<u>வெம் கரியின் ஏறு அனையான்,</u>
வில் பிடித்த வேலையினான்,
கொங்கு அலரும் நறும் தண் தார்க்
குகன் என்னும் குறி உடையான் " 25

<u>உரை</u>

'கங்கை **-கங்கையாற்றின்**; இருகரை **-இரண்டு கரைப்பகுதியில் உள்ளநிலங்களையும்**; உடையான் - **தனக்குச்சொந்தமாக உடையவன்**; கணக்கு இறந்த - **அளவில்லாத**; நாவாயான் **-படகுகளை உடையவன்**; உங்கள் குலத் தனி நாதற்கு - **உங்கள் சூரியவம்சத்தில் திருவவதாரம் செய்தருளிய ஒப்பற்ற தலைவனான இராமனுக்கு**; உயிர்த்துணைவன் - **ஆத்ம நண்பன்**; உணர் தோளான் - **உயர்ந்ததோள்களை உடையவன்**; வெங்கரியின் ஏறு அனையான் **கொடிய ஆண்(மதம் பிடித்த)** - **யானையை ஒத்தவன்**; வில் பிடித்த வேலையினான் - **வில்லைக் கையில் பிடித்துக் கொண்டுள்ள சே (வேட்டுவவீரராகிய)னைக் கடலை உடையவன்**;கொங்கு அலரும் நறுந் தண்தார் **-மணம் வீசித்தேன் பிலிற்றும் குளிர்ந்த மாலையையணிந்துள்ள**; குகன் என்னும் குறி உடையான் - **குகன் என்கின்ற பெயரை உடையவன்;' (அடுத்த பாட்டில் முடியும்(**

கங்கையாற்றின் இரண்டு கரைப் பகுதிகளிலும் உடைய நிலங்களை தனக்குச் சொந்தமாக உடையவன், அளவில்லாத படகுகளை உடையவன், உங்கள் சூரிய வம்சத்தில் திருவவதாரம் செய்த ஒப்பற்ற தலைவனாகிய இராமனுக்கு உயிர் நண்பன், உயர்ந்த தோள்களை உடையவன், கொடிய ஆண் யானையை ஒத்தவன், வில்லேந்திய வேட்டுவச் சேனைக் கடலை உடையவன், மகரந்தமணிகள் சிந்த இதழ்கள் விரிந்த மலர்களாலான வாசைன மிக்க குளிர்ந்த மாலையை அணிந்துள்ள குகன் எனும் பெயரையுடையவன்.



"**<u>கல் காணும் திண்மையான்</u>**,
கரை காணாக் காதலான்,
<u>அல் காணில் கண்டு அனைய</u>
<u>அழகு அமைந்த மேனியான்,</u>
மல் காணும் திரு நெடுந்தோள்
<u>மழை காணும் மணி நிறத்தாய்!</u>
நின் காணும் உள்ளத்தான்,
நெறி எதிர் நின்றனன் " என்றான் .26

<u>உரை</u>

'மல்காணும் திரு நெடுந்தோள் **-மற்போரில் எல்லை கண்ட அழகிய நெடிய தோளைஉடைய**; மழை காணும் மணி நிறத்தாய் - **கார்மழையைக் கண்டால் போன்ற நீலமணி போலும்நிறம் வாய்ந்த திருமேனி அழகனே!**; கல்காணும் திண்மையான் **-மலையைக் கண்டாற் போன்ற வலிமை உடையவன்**; கரை காணாக் காதலான் - **(இராமன் பால்) எல்லை காணமுடியாத பேரன்பை உடையவன்**; காணில் - **வடிவத்தைப் பார்த்தால்**; அல் கண்டு அனைய அழகு அமைந்த மேனியான் - **இருளைக் கண்டாற்போன்ற அழகு பொருந்திய உடம்பை உடையவன்(ஆகிய இத்தகைய குகன்(**; நெறி எதிர் - **நீசெல்கின்ற வழியின் எதிரில்**; நின்காணும் உள்ளத்தான்

-உன்னைப்பார்க்கும் மனம் உடையவனாய்; நின்றனன் 'என்றான் **-நின்றுகொண்டுள்ளான்' என்று சொன்னான்சுமந்திரன்.**

மற்போரில் எல்லைகண்ட நெடிய தோள்களை உடைய கார் மழையைக் கண்டால் போன்ற நீல மணி போலும் நிறம் வாய்ந்த திருமேனி அழகனே, மலையைக் கண்டால் போன்ற வலிமையுடையவன், இராமனிடம் எல்லை காணமுடியாத பேரன்பினையுடையவன், அவனது வடிவத்தைக் காணில், இருளைப் போன்ற அழகு நிறைந்த உடம்பினை உடையவன், இத்தகைய குகன் நீ செல்கின்ற வழியின் எதிரில் நின்னைக் காணும் மனம் உடையவனாய் நின்றுகொண்டிருக்கின்றான் என்று சுமந்திரன் கூறினான்.

பரதன் குகனைக் காண விரைதல்



தன்முன்னே, அவன் தன்மை
தன் துணைவன் முந்து உரைத்த
சொல் முன்னே உவக்கின்ற
துரிசு இலாத் திரு மனத்தான்,
'மன் முன்னே தழீஇக் கொண்ட
மனக்கு இனிய துணைவனேல்,
என் முன்னே; அவற் காண்பென்
யானே சென்று 'என எழுந்தான் .27

<u>உரை</u>

தன்முன்னே **-தன் எதிரில்**; அவன் தன்மை **-அந்தக் குகனது நல்லியல்புகளை**; தந்தை துணை **-தன் தந்தையாகிய தயரதனின் நண்பனான சுமந்திரன்**; முந்து உரைத்த **-முற்பட்டுச் சொல்லிய**; சொல்முன்னே **-சொல்லுக்கும் முன்பாக**;உவக்கின்ற **- மகிழ்ச்சி அடைகின்ற**; துரிசு இலாத் திரு மனத்தான் **-குற்றம்சிறிதும் இல்லாத நல்ல மனத்தை உடையவனாகிய பரதன்**; 'மன் முன்னே தழீஇக் கொண்ட **- நம் அரசனாகிய இராமன் வனம் புகுந்த முன்னமே அன்பு) செய்துதழுவிக் கொண்டுள்ள (**; மனக்குஇனிய துணைவனேல் **- அவன் மனத்துக்கு இனிய துணைவன் ஆனால்**; என் முன்னே **-என்னைஅவன்) வந்து பார்ப்பதற்கு (முன்னமே**; யானே சென்று அவற் காண்பென்' **- நானேசென்று அவனைக் காணுவேன் (முற்பட்டு)**;' என **- என்று சொல்லி**; எழுந்தான் **- புறப்பட்டான்.**

தன் எதிரில் அந்தக் குகனின் நல்லியல்புகளை தனது தந்தையாகிய தசரதனின் நண்பனாகிய சுமந்திரன் முற்பட்டுச் சொல்லிய சொல்லின் முன்பாக, மகிழ்ச்சியடைகின்ற சிறிதளவும் குற்றமில்லாத தூய மனத்தை உடையவனாகிய பரதன், நம் அரசனாகிய இராமன். வனம் புகு முன்னரே தழுவிக்கொண்ட அவன் மனதுக்கு இனிய துனைவன் ஆனால், என்னை அவன் வந்து பார்ப்பதற்கு முன்னமே நானே சென்று அவனைப் பார்ப்பேன் என்று சொல்லிப் புறப்படுவதாக எழுந்தான்.

பரதன் தோற்றம் கண்ட குகன் நிலையும் செயலும்(2418-2421)

என்று எழுந்து தம்பியொடும்
எழுகின்ற காதலொடும்
<u>குன்று எழுந்து சென்றது எனக்</u>
குளிர் கங்கைக் கரை குறுகி
நின்றவனை நோக்கினான்,
திருமேனி நிலை உணர்ந்தான்,
துன்று கரு நறுங்குஞ்சி
எயினர்கோன் துண் என்றான் .28

<u>உரை</u>

(பரதன் - என்று **(இவ்வாறு சொல்லி**; எழுந்த தம்பியொடும் **- தன்னுடன்புறப்பட்ட சத்துருக்கனனொடும்**; எழுகின்ற காதலொடும் **- (இராமனிடத்தில்அன்புடையவனும், இராமனால் அன்பு செய்யப் பெற்றவனும் ஆகிய குகனைப் பார்க்கப் போகிறோம்என்றுஉள்ளே (மேலும் மேலும் உண்டாகின்ற பேரன்போடும்**; குன்று

எழுந்து சென்றது என - **ஒருமலை புறப்பட்டுச் சென்றது என்று சொல்லுமாறு**; குளிர் கங்கைக் கரை குறுகி - **குளிர்ச்சி மிகுந்த கங்கையின் வடகரையை அணுகி**; நின்றவனை -**நின்ற பரதனை**; துன்று கரு நறுங் குஞ்சி எயினர் கோன் - **நெருங்கிய கருமையான மணம் வீசும் தலைமுடி உடையவேடர் தலைவனாய குகன்**; நோக்கினான் -**கண்ணால் பார்த்தான் (மனக் கருத்தோடு)**; திருமேனி நிலை -**வாடிச் சோர்ந்துள்ள பரதனது திருமேனியின் வாட்டமான உணர்ந்து கொண்டான்**; துண் என்றான் -**திடுக்குற்றான்.**

இவ்வாறு சொல்லி, தன்னுடன் புறப்பட்ட சத்துருக்கனோடும் உள்ளத்திலே மேன்மேலும் உய்டாகின்ற பேரன்பினோடும், ஒரு மலை புறப்பட்டுச் சென்றது போல, குளிர்ச்சி மிகுந்த கங்கையின் வடகரையை அணுகி நின்ற பரதனை, நெருங்கிய கருமையான மணம் வீசும் தலை முடியினை உடைய வேடர் தலைவனான குகன் கங்கையின் தென்கரையிலே நின்று கண்ணால் பார்த்தான். வாடிச் சோர்ந்துள்ள பரதனின் திருமேனி நிலையைத் தன் அனுபவத்தால் உணர்ந்து திடுக்குற்றான்.



வற்கலையின் உடையானை
மாசு அடைந்த மெய்யானை
<u>நல் கலை இல் மதி என்ன</u>
நகை இழந்த முகத்தானைக்
கல் கனியக் கனிகின்ற
துயரானைக் கண் உற்றான்,
வில் கையின் நின்று இடைவீழ,
விம்முற்று நின்று ஒழிந்தான் .29

<u>உரை</u>

வற்கலையின் உடையானை -**மரவுரியாலாகிய ஆடையை உடுத்துள்ள**; மாசு அடைந்தமெய்யானை -**புழுதி படிந்த உடம்பை உடைய**; நற் கலை இல் மதி என்ன -**நல்லகலைகளில்லாத (ஒளியற்ற) சந்திரன் போல**; நகை இழந்த முகத்தானை -**ஒளி இழந்தமுகத்தை உடைய; பரதனை**; கண்ணுற்றான் **கண்ணால் சந்தித்துப் (குகன்) - பார்த்து**; கையினின்று வில்இடை வீழ -**தன் கையிலிருந்து வில்லானது தானே சோர்ந்து நிலத்தின்கீழ் விழும்படி**; விம்முற்று -**துன்பத்தால் கலக்கமுற்று**; நின்று ஒழிந்தான் - **ஒரு செயலும் இன்றி நின்றவாறே இருந்தான்.**

மரவுரியாலான ஆடையினை உடுத்துள்ள, புழுதி படிந்த உடம்பையுடைய, நல்ல கலைகள் இல்லாத சந்திரன் போல ஒளியிழந்த முகத்தையுடைய, கல்லும் கரைந்து உருகும்படி குழைந்துருகும் துன்பத்தையுடைய, பரதனை தன் கண்ணால் நோக்கிப் பார்த்து, தன் கையிலிருந்த வில்லானது தானாகவே சோர்ந்து நிலத்தின் கீழ் விழும்படி துன்பத்தால் கலக்கமுற்று ஒரு செயலுமற்று நின்றுகொண்டிருந்தான்.

"**<u>நம்பியும் என் நாயகனை</u>**
<u>ஒக்கின்றான்; அயல் நின்றான்</u>
<u>தம்பியையும் ஒக்கின்றான்;</u>
தவம் வேடம் தலைநின்றான்;
துன்பம் ஒரு முடிவு இல்லை;
திசை நோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு?'' என்றான் .30

<u>உரை</u>

'நம்பியும் -**ஆடவரிற் சிறந்த இப்பரதனும்**; என் நாயகனை - **என் தலைவனாகிய இராமனை**; ஒக்கின்றான் - **ஒத்திருக்கிறான்**; அயல் நின்றான் - **அருகில் இருக்கின்றவன் (ஆகிய சத்துருக்கனன்)**; தம்பியையும் ஒக்கின்றான் -**இராமனது உடன்பிரியாத் தம்பியாகிய இலக்குவனை ஒத்திருக்கின்றான்**; தவ வேடம் தலை நின்றான் **(இப்பரதன்) - தவத்துக்குரிய வேடத்தை மேற்கொண்டுள்ளான்**; துன்பம் ஒரு முடிவு இல்லை - **இப்) படுகிற துன்பத்துக்கோ ஓர் அளவே இல்லை (பரதன்**; திசை நோக்கித் தொழுகின்றான் -**இராமன் சென்ற**

திசையாகிய தென்திசையைப் பார்த்து அவ்வப்போது வணங்குகிறான்; (இவற்றால்இவன் துயர்நிலை விளங்குதலின் - எம்பெருமான் **(எம்கடவுளாகிய இராமனுக்கு**; பின்பிறந்தார் **-தம்பிகள்**; பிழைப்பு இழைப்பரோ' - **(தவறு செய்வார்களா('தவறு செய்வர் என்று நான் எண்ணியது பெரும் தவறு(**; என்றான் - **என்று நினைத்தான்.**

ஆடவரிற் சிறந்த இப் பரதனும் என் தலைவனாகிய இராமனை ஒத்திருக்கின்றான். அருகில் இருக்கின்ற சத்துருக்கனும் இலக்குவனை ஒத்திருக்கின்றான். இப் பரதன் தவவேடம் மேற்கொண்டுள்ளான். இவனது துன்பத்திற்கு ஓர் அளவே இல்லை. இராமன் சென்ற தென்திசையை நோக்கி அடிக்கடி வணங்குகின்றான். எமது இராமனாகிய கடவுளுக்குத் தம்பிமார்கள் தவறு செய்வார்களோ? ஏன நினைத்தான்.



"உண்டு இடுக்கண் ஒன்று; உடையான்,
உலையாத அன்புடையான்
கொண்ட தவவேடமே
கொண்டிருந்தான்; குறிப்பு எல்லாம்
கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்;
காமின்கள் நெறி; " என்னாத்
தண் துறை ஓர் நாவாயில்
ஒரு தனியே தான் வந்தான் .31

உரை

'உண்டு இடுக்கண் ஒன்று உடையான் **-புதிதாக உண்டாகிய துன்பம் ஒன்றை உடையவனும்**; உலையாத அன்பு உடையான் - **இராமன்பால் சிறிதும் தளர்ச்சியுறாத அன்பு கொண்டவனும்**; கொண்ட தவவேடமே - **(அந்த இராமன்கொண்டிருந்த தவ வேடத்தையே (**; கொண்டிருந்தான் - **தானும்கொண்டுள்ளவனும் ஆகிய இப்பரதனது**; குறிப்புஎல்லாம் - **மனக் கருத்து எல்லாம்**; கண்டு **-நேரில் பார்த்து அறிந்து**; உணர்ந்து - **அதனை என் அநுபவத்தாலும் நுகர்ந்து**; பெயர்கின்றேன் **-திரும்பி வருகின்றேன்**; நெறி காமின்கள் **(அதுவரை)** - **வழியைப்பாதுகாத்திருங்கள்**;'என்னா - **என்று சொல்லி**; தண்துறை **குளிர்ந்தநீர்த்துறையில் (கங்கையின்)** -; தான் ஓர் நாவாயில் ஒரு தனியே வந்தான் **தான் ஒருபடகில் வேறு (குகன்) - யாரும் இன்றித் தனியே வந்து சேர்ந்தான்.**

புதிதாய் உண்டான துன்பமொன்றை உடையவனும், இராமனிடம் சிறிதும் குன்றாத பேரன்புடையவனும், இராமன் கொண்டிருந்த தவ வேடத்தையே தானும் கொண்டிருப்பவனும் ஆகிய இப் பரதனின் மனக்கருத்தெல்லாம் நேரில் நான் பார்த்து உணர்ந்து திரும்பி வருகிறேன்: அதுவரை வழியைப் பார்த்திருங்கள் என்று சொல்லிக் குளிர்ந்த நீர்த்துறையில் தான் மட்டும் ஒரு படகில் வேறெவரும் இன்றி தனியே வந்து தென் கரையைச் சேர்ந்தான் குகன்.

பரதன் வணங்கக் குகன் தழுவுதல்

வந்து, எதிரே தொழுதானை
வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும்
அவனும், அவனடி வீழ்ந்தான்;
தந்தையினும் களி கூரத்
தழுவினான், தகவு உடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான் .32

உரை

வந்து **வந்து (கங்கையின் வடகரைக்கு)** -; எதிரே தொழுதானை - **தன்னைஎதிரிலே கும்பிட்ட பரதனை**; வணங்கினான் **தானும் (குகன்)** - **வணங்கினான்**; மலர்இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் - **(திருமாலின் திருவுந்தித்தாமரையில்வீற்றிருக்கும் வேதியனாகிய பிரமனும் (தன்னை வணங்கும் சிறப்புப் பெற்ற பரதனும்**; அவன் அடிவீழ்ந்தான் - **அந்தக் குகனது அடித்தலத்தில் விழுந்து வணங்கினான்**; (அதுகண்டு(

தகவு உடையோர் சிந்தையினும் சென்னி யினும் வீற்றிருக்கும் சீர்த்தியான் - **நடுவுநிலைமையிற்சிறந்த மேலோர்களது மனத்திலும், தலையிலும் ஏற்றிப் போற்றப்படும் புகழ் உடைய பண்பு நலம்செநிந்த உத்தமனாகிய குகனும்**; தந்தையினும் களிகூர **-பெற்ற தந்தையினும் மகிழ்ச்சிமிக**; தழுவினான் - **(அந்த அடி வீழ்ந்த பரதனை எடுத்துமார்போடு அணைத்துக்கொண்டான் ((தொடரும்(**

கங்கையின் வடகரைக்கு வந்து, தன்னை எதிர் நின்று வணங்கிய பரதனைக் குகனும் வணங்கினான். திருமாலின் திருவுந்தியாகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் வேதியனான பிம்மனும் தன்னை வணங்கும் சிறப்புப் பெற்ற பரதனும், அந்தக் குகனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். நடுவு நிலைமையால் சிறந்த மேலோர்கள் மனதிலும், தலையிலும் வைத்துப் போற்றப்படுகின்ற உத்தமனாகிய குகனும், பெற்ற தந்தையிலும் பார்க்க மகிழ்ச்சி அதிகரிக்கப் பரதனை மார்போடு எடுத்து அணைத்துக் கொண்டான்.

குகன் வினாவும் பரதன் கூறும் விடையும்



தழுவின புளிஞர் வேந்தன்
<u>தாமரைச் செங்கணானை</u>
‘எழுவினும் உயர்ந்த தோளாய்!
எய்தியது என்னை? ‘என்ன,
‘முழுது உலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையில் நின்றும்
வழுவினன், அதனை நீக்க
மன்னனைக் கொணர்வான் ‘என்றான் .33

<u>உரை</u>

தழுவின புளிஞர் வேந்தன் **அவ்வாறு) - தழுவிக் (பரதனைத் கொண்ட வேடர் தலைவனான குகன்**; தாமரைச் செங்கணானை - **செந்தாமரை போலும் கண்களை உடைய பரதனைப் (பார்த்து)**; ‘எழுவினும் உயர்ந்த தோளாய் **-!கணைய மரத்தினும் வன்மைமிக்குயர்ந்த தோள்களை உடைய பரதனே!**; எய்தியது என்னை’ என்ன **கங்கைக் கரைக்) - காட்டிற்கு(நீ வந்த காரணம் என்ன என்று வினாவ**; (பரதன்உலகு முழுது (அளித்த தந்தை **-உலகம் முழுவதையும் ஒரு குடை நீழலில் ஆட்சி செய்த சக்கரவர்த்தியாகியஎன் தந்தை தயரதன்**; முந்தையோர் முறையினின்றும் வழுவினன் **-தன் மரபில் முன்னுள்ளாரது நீதிமுறையிலிருந்தும் தவறிவிட்டான்**; அதனை நீக்க **-அந்த அநீதியை நீக்கும் பொருட்டு**; மன்னனைக் கொணர்வான்’ - **முறைப்படி அடுத்து அரசனாகிய இராமனைத் திரும்ப அழைத்துக்கொண்டு செல்வதற்காக (வந்தேன்)**; என்றான் **-என்று சொன்னான்.**

வேடர் தலைவனாகிய குகன், செந்தாமரை மலர் போலும் கண்களையுடைய பரதனைப் பார்த்து, கணைய மரத்திலும் வன்மைமிக்க உயர்ந்த தோள்களையுடையவனே! நீ வந்த காரணம் என்னவென்று வினாவ, உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த சக்கரவர்த்தியாகிய எனது தந்தை, முந்தையோர் காட்டிய முறையினின்றும் தவறி விட்டான். அந்த அநீதியை நீக்கும் பொருட்டு, முறைப்படி அடுத்து அரசாள வேண்டிய இராமனைத் திரும்ப அழைத்துக் கொண்டு செல்வதற்காகவே வந்துள்ளேன் என்றான்.

பரதன்பால் தீதின்மை கண்ட குகன்
வணங்கிக் கூறல்



கேட்டனன் கிராதர் வேந்தன்;
கிளர்ந்து எழும் உயிரன் ஆகி,
மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்;
விம்மினன், உவகை வீங்கத்
தீட்ட அரு மேனி மைந்தன்
<u>சேவடிக் கமலப் பூவில்</u>
பூட்டிய கையன் பொய் இல்
உள்ளத்தன் புகலல் உற்றான் .34

உரை

கிராதர் வேந்தன் **-வேடர் தலைவனாய குகன்**; கேட்டனன் - **(பரதன் சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு (**; கிளர்ந்து எழும் உயிர்ப்பன்கி **-மேல் எழுந்து மிகும் பெருமூச்சு உடையவனாகி**; மீட்டும் **முன்)** - **வணங்கியதோடு அன்றித் (திரும்பவும்**; மண் அதனில் வீழ்ந்தான் - **பூமியில் விழுந்து வணங்கி**; உவகை வீங்க - **மன மகிழ்ச்சி மேல் பெருக**; விம்மினன் **-உடம்பு பூரித்து**; தீட்ட அரு மேனி மைந்தன் - **எழுதலாகாத திருமேனியையுடைய பரதனது**; சேவடிக் கமலப் பூவில் - **திருவடிகளாகிய தாமரை மலரில்**; பூட்டிய கையன் - **இறுக அணைத்த கையுடனே**;பொய்யில் உள்ளத்தன் **-பொய்யற்ற புரைதீர்ந்த மனத்தால்**; புகலல் உற்றான் - **சில வார்த்தைகள் சொல்லலானான்.**

வேடர் தலைவனான குகன், பரதன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, மேலெழுந்து மிகும் பெருமூச்சு உடையவனாகித் திரும்பவும் பூமியில் விழுந்து வணங்கி, மனமகிழ்ச்சி மேலும் பெருகிட உடம்பு பூரித்து, எழுத முடியாத திருமேனியை உடைய பரதனின் திருவடிகளாகிய தாமரை மலர்களில் இருக அணைத்த கைகளுடன், பொய்யற்ற தூய மனத்துடன், சில வார்த்தைகள் சொல்லலானான்.

தாய் உரை கொண்டு, தாதை
உதவிய **தரணி தன்னைத்**
தீ வினை என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து,
புகழினோய்தன்மை கண்டால் !
ஆயிரம் இராமர் நின் கேழ்
ஆவரோ? தெரியின் அம்மா !35



உரை

‘புகழினோய் - !**புகழ் உடையவனே!**; தாய் உரை கொண்டு **(உன்)** - **தாயாகியகைகேயியின் ‘வரம்’ என்கின்ற வார்த்தையைக் கொண்டு**; தாதை உதவிய **தந்தையாகிய தயரதன் அளித்த(உன்)** -; தரணி தன்னை - **(கோசல நாட்டுஅரசாட்சியை (**; தீவினைஎன்ன நீத்து **-தீயவினை வந்து சேர்ந்தது போலக் கருதிக் கைவிட்டு**; முகத்தில் சிந்தனை தேக்கி - **முகத்தில் கவலை தேங்கியவனாய்**; போயினை **வந்தாய் (வனத்துக்கு)** -; என்ற போழ்து **-என்ற காலத்தில்**; தன்மை கண்டால் **(உனது)** - **நல்லியல்புகளைஅறியுமிடத்து**; தெரியின் - **ஆராய்ந்தால்**; ஆயிரம் இராமர் நின்கேழ்ஆவரோ **-ஆயிரம் இராமர்கள் உளரானாலும் நின் ஒருவனுக்குச் சமானம் ஆவரோ**; அம்மா.- !

புகழையுடையவனே! தூயாகிய கைகேயியின் வார்த்தைகளைக் கொண்டு, உன் தந்தை தசரதன் அளித்த கோசல நாட்டு அரசுரிமையைத் தீயவினை வந்து சேர்ந்தது போலக் கருதிக் கைவிட்டு, முகத்தில் கவலை தேங்கியவனாய், காட்டுக்கு வந்தாய் என்ற காலத்தில், உன் நல்லியல்புகளை அறிந்து ஆராய்ந்தால் ஆயிரம், இராமர் உளராயினும் நின் ஒருவருக்குச் சமானம் ஆவாரோ அம்மா!



என் புகழ்கின்றது ஏழை
எயினனேன்? **இரவி என்பான்**
தன் புகழ்க் கற்றை மற்றை
ஒளிகளைத் தவிர்க்குமா போல,
மன் புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்
உயர் குணத்து உரவு தோளாய் !36

உரை

‘உயர் குணத்து உரவுத் தோளாய்! **-உயர்த்த உத்தமக்குணங்களையும், வலிமையான தோளையும் உடைய பரதனே!**; ஏழை எயினனேன் **-அறிவில்லாத வேடனாகிய யான்**; என் புகழ்கின்றது? - **எவ்வாறு புகழ முடியும்**; இரவிஎன்பான் தன் **-சூரியன் என்று சொல்லப்படுகிறவனது**; புகழ்க் கற்றை **-புகழாகியஒளித்தொகுதி**; மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல் **-மற்றைக் கோள்கள், உடுக்களின் ஒளிகளையெல்லாம் அடக்கிக் கீழ்ப்படுத்தித் தான் மேற் சென்றுள்ளவாறு போல**;மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம் - **எல்லா அரசர்களாலும் பாராட்டப்பெறும் பெருமை படைத்த உங்கள் சூரிய வம்சத்து முன்னைய அரசர்களது எல்லாப்புகழ்களையும்**; உன் புகழ் ஆக்கிக்கொண்டாய் - **உனது புகழுக்கும் அடங்குமாறு செய்துகொண்டுவிட்டாய்.**



உயர்வான உத்தம குணங்களையும், வலிமையான தோள்களையும் உடைய பரதனே! அறிவில்லாத வேடனாகிய யான் உன்னை எவ்வாறு புகழ முடியும்? சூரியன் தன் புகழாகிய ஒளித் தொகுதியால் மற்றைய கோள்கள், உடுக்கள் ஆகியவற்றின் ஒளிகளையெல்லாம் அடக்கிக் கீழ்ப்படுத்தி மேற்செல்வது போல எல்லா அரசர்களாலும் பாராட்டப் பெறும் பெருமை படைத்த உங்கள் சூரியவம்சத்து முன்னைய அரசர்களது எல்லாப் புகழ்களையும், உனது புகழுக்குள் அடக்குமாறு செய்து கொண்டாய்.

பரதன்பால் குகன் ஒப்பற்ற அன்பு கொள்ளுதல்

என இவை அன்ன மாற்றம்
இவைவன பலவும் கூறிப்
புனை கழல் புலவு வேல் கைப்
புளிஞர் கோன் பொரு இல் காதல்
அனையவற்கு அமைவில் செய்தான்;
ஆர் அவற்கு அன்பு இலாதார்?
நினைவு அருங்குணம் கொடு அன்றோ
இராமன்மேல் நிமிர்ந்த காதல் .37

உரை

புனை கழல் **-அலங்கரிக்கப் பெற்ற வீரக்கழலை அணிந்த**; புலவு வேற்கை **-புலால் மணம் வீசும்வேலைப் பிடித்த கையை உடைய**; புளிஞர் கோன் **-வேடர் தலைவனாகிய குகன்**; என இவைஅன்ன மாற்றம் இயைவன புலவும் கூறி **-என்று இதுபோன்ற பொருந்திய சொற்கள் பலவற்றையும்சொல்லி**; பொரு இல் காதல் அனையவற்கு - **இராமன்பாலும் அதனால் தன்பாலும் ஒப்பற்றபேரன்பினை உடையனாகிய பரதனுக்கு**; அமைவின் செய்தான் - **பொருந்திய நல்லுபசரிப்புகளைத் தகுதியாகச் செய்தான்**; அவற்கு அன்பு இலாதார் யார் - **அப்பரதனிடத்தில் அன்பு செலுத்தாதவர் யார்உளர்?**; இராமன் மேல் நிமிர்ந்த காதல் - **இராமனிடத்து மேல் சென்று உயர்ந்த அன்பு அவன் சக்)கரவர்த்தித் திருமகள் என்பதாலா?அன்று(**; நினைவு அருங் குணம்கொடு அன்றோ - **நினைக்கவும் முடியாத நற்குணங்களின்நிலையமாக அவன் இருந்தான் என்பதனால் அல்லவா? (அக்குணங்கள் இவன்பாலும் இருத்தலால் இவனிடமும் அன்பு நிமிர்ந்தது(.**

ஆலங்கரிக்கப்பட்ட வீரக்கழலை அணிந்த, புலால் மணம் வீசும் வேலினைப் பிடித்த கைகளினையுடைய, வேடர் தலைவனாகிய குகன், இவ்வாறு இவை போன்ற பொருத்தமான சொற்கள் பலவற்றையும் செல்லி, இராமனிடத்தும் அதனால் தன்னிடத்தும் ஒப்பற்ற பேரன்பினை உடைய பரதனுக்குப் பொருந்திய நல்லுபசரிப்புக்களை தகுதியாகச் செய்தான். அப்பரதனிடம் அன்பு செய்யாதவர்கள் யாருளர்? இராமன் மீது சென்று உயர்ந்து நிற்கும் பேரன்பானது நினைக்கவும் முடியாத நற்குணங்களின் உறைவிடமாக அவன் விளங்கினான் என்பதனாலல்லவா?

இராமன் உறைந்த இடத்தைப் பரதனுக்குக் குகன் காட்டுதல்

அவ் வழி அவனை நோக்கி,
அருள் தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத்து அண்ணல்,
தனின் திசைச் செங்கை கூப்பி,
'எவ்வழி உறைந்தான் நம் முன்? '
என்றலும், எயினர் வேந்தன்,
'இவ்வழி வீரயானே !
காட்டுவல்; எழுக 'என்றான் .38



உரை

அருள் தரு வாரி அன்ன **-கருணைப் பெருங்கடலை ஒத்த**; செவ்வழி உள்ளத்து அண்ணல் **-நேரிய வழியிற் செல்லும் மனத்தை உடைய பரதன்**; அவ் வழி **-அப்போது**; அவனை நோக்கி - **குகனைப் பார்த்து**; தென்திசைச் செங்கை கூப்பி **-இராமன் சென்றுள்ள தென்திசையைப் பார்த்துத்தன் சிவந்த கைகளைக் குவித்து வணங்கி**; 'நம்முன் **-நம்முடைய அண்ணன்**; எவ்வழிஉறைந்தான்?' - **எந்த இடத்தில் தங்கியிருந்தான்?**; என்றலும் **-என்றுகேட்டவுடனே**; எயினர் வேந்தன் **-வேட அரசனாகிய குகன்**; 'வீர - **!வீரனே!**; இவ் வழி - **இவ்விடத்தில்**; யானே காட்டுவல் **-நானே (அவ்விடத்தை உனக்குக்) காண்பிப்பேன்**; எழுக' - **என்னுடன் புறப்படுவாயாக**;என்றான் - **என்றான்**.

கருனைப் பெருங்கடலை ஒத்த, நேர் வழியில் செல்லும் மனத்ததை உடைய பரதன், அப்போது குகனைப் பார்த்து, இராமன் சென்ற தென் திசையை நோக்கித் தன் சிவந்த கைகளைக் குவித்து வணங்கி, நம்முடைய அண்ணன் எந்த இடத்தில் தங்கியிருந்தான் என்று கேட்டலுடனே வேடர் அரசனாகிய குகன், வீரனே! இந்த இடத்தில் நானே காண்பிப்பேன் என்னுடன் புறப்படுவாயாக என்றான்.

இராமன் வைகிய இடம் கண்ட பரதன் நிலையும் நினைவும்இராமன் பள்ளிகொண்ட இடம் கண்ட பரதனுடைய செயலும் சொல்லும்

கார் எனக் கடிது சென்றான்;
கல் இடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்;
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்;
பருவரல் பரவை புக்கான்.
வார் மணிப் புனலால் மண்ணை
மண்ணுநீர் ஆட்டும் கண்ணான் .39

உரை

(குகன் காட்டிய இடத்துக்குப் பரதன்- கார் எனக் கடிது சென்றான் (**மேகம் போலவிரைவாகச் சென்று**; வார் சிலைத் தடக்கை வள்ளல் - **கட்டமைந்த வில்லேந்திய நீண்டகைகளை உடைய இராமன்**; வைகிய - **தங்கியிருந்த**; கல்லிடைப் படுத்த புல்லின் பள்ளி - **கற்களின் இடையே பரப்பப்பெற்ற புல்லால் ஆகிய படுக்கையை**; கண்டான் **-பார்த்து**; பார்மிசை **-பூமியின் மேல்**; பதைத்து **-துடித்து**; வீழ்ந்தான் **-விழுந்து**; பருவரல் பரவை புக்கான் **-துன்பம் எனும் கடலில் புகுந்து**; வார் மணிப் புனலால் **-பெருகுகின்ற முத்துமணி போன்ற கண்ணீரினால்**; மண்ணை **-பூமியை**; மண்ணு நீர் ஆட்டும் **-திருமஞ்சனத் தண்ணீரால் குளிப்பாட்டுகின்ற**; கண்ணான் **-கண்ணுடையவனாக ஆனான்**.

மேகம் போல் விரைவாகச் சென்று, கட்டிறுக்கமான வில்லினை ஏந்திய இராமன் தங்கியிருந்த, கற்களின் இடையே பரப்பப்பட்ட புல்லால் ஆகிய படுக்கையைப் பார்த்துப் பூமி மேல் துடிதுடித்து வீழ்ந்து, துன்பம் எனும் கடலில் புகுந்து, பெருகிடும் முத்துமணி போன்ற கண்ணீரினால் பூமியை திருமஞ்சன நீரினால் குளிப்பாட்டுகின்ற கண்ணுடையவனானான்.

இயன்றது என் பொருட்டினால் இவ்
இடர் உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும்
அழுது என, அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி
துறந்திலென்; சுடரும் காசு
குயின்று உயர் மகுடம் சூடும்
செல்வமும் கொள்வென் யானே .40



உரை

உனக்கு இவ் இடர் என்பொருட்டினால் இயன்றது என்ற போழ்தும் **உனக்கு (!இராம) - இவ் வனவாசமாகிய துன்பம் என்காரணமாக உண்டாகியது என்று அறிந்த அந்தநேரத்திலும்**; (அதன் பிறகுகிழங்கும் (காயும் அழுது என அயின்றனை - **கிழங்கு, காய் முதலியவற்றை (அரண்மனையில் இருந்து உண்ணும்அமுது போல உண்டாய் (**; அரிய புல்லில்துயின்றனை **-உறங்குதற்கு இயலாத புற்படுக்கையில் உறங்கினாய்**; எனவும் - **என்று அறிந்த இந்த நேரத்திலும்**; யான் ஆவி துறந்திலென் - **யான் உயிர் போகப் பெற்றேன் இல்லை, (அம்மட்டோ(**; சுடரும் காசு குயின்று உயர் மகுடம் **-ஒளி விடும் பொன்னாற் செய்யப் பெற்று உயர்ந்த திருமுடியை**; சூடும் செல்வமும் கொள்வேன் - **சூட்டிக்கொள்ளும் அரசச் செல்வத்தையும் ஏற்றுக் கொள்வேன் போலும்.**

இராமா! உனக்கு இவ்வனவாசமாகிய துன்பம் என் காரணமாக ஏற்பட்டது என அறிந்த அவ்வேளையிலும், பின்னர் கிழங்கு, காய் முதலியவற்றை அமுது போலக்கருதி உண்டாய்: உறங்குவதற்கு ஏற்றதல்லாத கடினமான புற்படுக்கையில் துயின்றாய் என்று அறிந்த இவ்வேளையிலும் யான் உயிர் போகப் பெற்றேன் இல்லை. ஒளிவிடும் பொன்னாலான உயர்வான திருமுடியைச் சூட்டிக் கொள்ளும் அரசுச் செல்வத்தையும் ஏற்றுக் கொள்வேன் போலும்.

பரதன் இலக்குவன் இரவை எங்கே கழித்தான்? எனக் குகன் கூறல்

தூண் தர நிவந்த தோளான்
பின்னரும் சொல்லுவான், 'அந்
நீண்டவன் துயின்ற சூழல்
இது எனில், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே
போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு? 'என இனிது கேட்டான்;
எயினர் கோன் இதனைச் சொன்னான் .41

உரை

தூண்தர **-தூணை ஒப்பாக**; நிவந்த தோளான் - **உயர்ந்த தோள்களை உடைய பரதன்**; பின்னரும் சொல்லுவான் - **மீண்டும் குகனைப் பார்த்துப் பேசுவான்**; 'அந்நீண்டவன் துயின்ற சூழல் இது எனின் **-அந்த நெடியவனாகிய இராமன் உறங்கிய இடம் இது என்றால்**; நிமிர்ந்த நேயம் பூண்டவன் தொடர்ந்து பின்னே போந்தவன் **அவ்) - இராமனிடத்தில்மேற்சென்ற மிகுந்த அன்பு கொண்டு அவனைத் தொடர்ந்து (அவன் பின்னேயே வந்தவனாகிய இலக்குவன்**; பொழுது நீத்தது - **இரவுப் பொழுதைக் கழித்தது**; யாண்டு?'- **எவ்விடத்தில்?**; என **-என்று**; இனிது கேட்டான் **-இனிமையாக வினாவினான்**;எயினர்கோன் - **வேட வேந்தனாய குகன்**; இதனைச் சொன்னான் **-இந்த விடையைக் கூறினான்.**

தூணினை ஒத்த உயர்ந்த தோள்களை உடைய பரதன் மீண்டும் குகனை நோக்கிக் கூறுவான். அந்த நெடியவனாகிய இராமன் உறங்கிய இடம் இதுவென்றால், அந்த இராமனிடம் மேலான அன்புகொண்டு அவனைப் பின்னால் தொடர்ந்து வந்த இலக்குமணன் இரவுப் பொழுதைக் கழித்தது எவ்விடத்தில்? என்று இனிமையாக வினாவினான்: வேடர் அரசனாகிய குகன், இந்த விடையினைக் கூறினான்.



‘**அல்லை ஆண்டு அமைந்த மேனி**
அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன்றிய கையோடும்
வெய்து உயிர்ப்போடும் வீரன்,
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்!
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்;
இமைப்பு இலன் நயனம் ‘என்றான் .42

உரை

‘கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! **-மலையைக் கீழ்ப்படுத்தி உயர்ந்ததோள்களை உடையவனே!**; அல்லை ஆண்டு அமைந்தமேனி அழகனும் - **இருளைப் பயன்படுத்தி அமைத்தால் ஒத்த கரிய திருமேனியுடைய அழகிற் சிறந்த இராமனும்**; அவளும் **-அந்தப் பிராட்டியும்**; துஞ்ச **-உறங்க**; வீரன் **-இலக்குவன்**; வில்லை ஊன்றிய கையோடும் **-வில்லின் மேல் வைத்த கையுடன்**; வெய்துஉயிர்ப்போடும் - **வெப்பமான மூச்சுடையவனாய்**; கண்கள் நீர் சொரிய **-தன்னிரண்டு கண்களும் நீரைச்சொரிய**; கங்குல் எல்லை காண்பளவும் **-இரவு தன் முடிவான விடியலைப் பார்க்குமளவும்**; நயனம் இமைப்பிலன் - **கண்கள் இமைகொட்டாமல் (உறங்காமல்)**; நின்றான்’ - **நின்றுகொண்டே காவல்) செய்துஇருந்தான் (**; என்றான் - **என்றான்.**

மலையினைக் கீழ்ப்படுத்திய உயர்ந்த தோள்களை உடையவனே! இருளைப் பயன்படுத்தி அமைத்தாற் போன்ற கரிய திருமேனியுடைய அழகிற் சிறந்த இராமனும், அந்தச் சீதாப் பிராட்டியும் உறக்கம் கொள்ள, இலக்குமணன் வில்லின் மீது வைத்த கையுடன், வெப்பமான மூச்சு உடையவனாய், தன் இரண்டு கண்களும் நீரைச் சொரிய, இரவானது தன் முடிவின் எல்லையாகிய விடியலைக் காணும் வரையும், கண்கள் இமை கொட்டாமல் நின்றுகொண்டே காவல் செய்திருந்தான் என்று குகன் கூறினான்.

பரதன் இலக்குவன் நிலை கண்டு பாராட்டுதலும் தன் நிலை கண்டு நொந்து கூறலும்

என்பத்தைக் கேட்ட மைந்தன்,
“‘இராமனுக்கு இளையார் ‘என்று
முன்பு ஒத்த தோற்றத் தேம் இல்,
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்;
அவன் அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ?
அழகிது என் அடிமை‘‘ என்றான் .43

உரை



என்பத்தை **-என்று சொன்னதை (குகன்)**; கேட்ட மைந்தன் - **கேட்ட பரதன்**; இராமனுக்குஇளையார் என்று **-இராமனுக்குத் தம்பிகள் என்று சொல்லும்படி**; முன்பு ஒத்ததோற்றத்தேமில் - **பிறக்கும்பொழுது ஒத்த தன்மையான பிறப்பைப் பெற்ற எங்கள் இருவரிலும்**; யான் - **பரதனாகிய யான்**; என்றும் முடிவு இலாத துன்பத்துக்கு ஏது ஆனேன் - **எக்காலத்தும் கரைகாணாத பெருந்துன்பத்தை இராமன் அடைதற்குக் காரணமாக ஆய்விட்டேன்**; அவன் - **அந்த இலக்குவன்**; அது - **அத்துன்பத்தை**; துடைக்க நின்றான் **-இராமனிடமிருந்து நீக்கத் துணையாக இராமனுடன் நின்றான்**; அன்புக்கு எல்லை உண்டோ? - **அன்புக்கு ஒரு வரையறை உள்ளதோ**; என் அடிமை அழகிது’ - **நான் இராமனுக்குச் செய்யும் அடிமைத்திறம்நன்றாயிருந்தது**; என்றான் - **என்று கூறினான்.**

என்று சொன்னதைக் கேட்ட பரதன், இராமனுக்குத் தம்பிகள் என்று சொல்லும்படி, பிறக்கும் போது ஒத்த தன்மையான பிறப்பைப் பெற்ற எங்கள் இருவரிலும், பரதனாகிய நான் எக்காலத்தும் கரைகாண முடியாத பெருந்துன்பத்தை இராமன் அடைவதற்குக் காரணமாக ஆகிவிட்டேன். அந்த இலக்குமணன், அத்துன்பத்தை இராமனிடமிருந்து நீக்குவதற்குத் இராமனுக்குத் துணையாக நின்றான். அன்புக்கு ஒரு வரையறை உண்டோ? நான், இராமனுக்குச் செய்யும் அடிமைத் திறம் நன்றாயிருந்தது என்றான்.

(1–43) பாடல் வரையான இக் குகப்படலப் பகுதியில் வினாவப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.

01. கம்பராமாயணம் எந் நூலைத் தழுவி எழுந்தது?
02. கம்பராமாயணத்தில் இடம்பெறும் காண்டங்கள், படலங்கள், செய்யுள்கள் எத்தனை?
03. காண்டம், படலம் என்பவற்றை விபரிக்குக.
04. குகப்படலத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?, காரணத்தை விளக்குக.
05. குகப்படலம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
06. கம்பராமாயணம் தேற்றம் பெற்ற காலப் பின்னனியை விளக்குக.
07. கம்பராமாயணத்தில் இடம்பெறும் காண்டங்கள் எத்தனை.
08. கம்பர் பற்றி சிறுகுறிப்பு வரைக.
09. குகப்படலத்தில் இடம்பெறும் பாத்திரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
10. குகப்படலத்தில் கூறப்படும் விடயங்களை சுருக்கமாக குறிப்பிடுக.
11. இப் பகுதியில் வெளிப்படும் பரதனின் சேனை பற்றிய வர்ணனைகளை விளக்குக.
12. பரதன், சேனையுடன் வருதல் கண்ட குகனின் சீற்றம் பற்றிய வர்ணனை.
13. குகன் தனது சேனைகளுக்குக் கூறிய வீர வார்த்தைகள்.
14. சுமந்திரன் குகனைப் பற்றிப் பரதனுக்குக் கூறியவை.
15. பரதனின் நிலை கண்ட குகனின் செயற்பாடுகள்.
16. குகனுக்கும் பரதனுக்கும் இடையிலான உரையாடல்கள்.
17. இப் பகுதியில் வெளிப்படும் கம்பனின் கவித்துவச் சிறப்புகள்.
18. இப் பகுதியில் கம்பர் கையாண்டுள்ள அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.
19. இப்பகுதியில் வெளிப்படும் பரதனின் குணயியல்புகளைத் தருக.
20. இப்பகுதியில் வெளிப்படும் குகனின் குணயியல்புகளைத் தருக.
21. இப்பகுதியில் வெளிப்படும் சுமந்திரனின் குணயியல்புகளைத் தருக.
22. இப்பகுதியில் வெளிப்படும் இராமனின் சிறப்புக்களை குறிப்பிடுக.
23. இப்பகுதியில் வெளிப்படும் இலக்குவனனின் சிறப்புக்களை குறிப்பிடுக.

குறிப்பு: குகப்படலப் பகுதியில் இடம்பெறும் செய்யுள்களை பதப்பிரிப்பின் அடிப்படையில் பொருளுணர்ந்து, வெளிப்படும் பாத்திரங்களின் இயல்புகளையும், அணிப்பிரயோகங்களையும். சந்தர்ப்பங்களையும் இனங்கண்டு வேறுபிரித்து கற்றல் அவசியம். மேலும், தொகுப்பாக வினாவப்படும் வினாக்களுக்கும் சிறந்த அறிமுகத்தை வழங்கி விடையளிக்க கற்றுக்கொள்ளல் வேண்டும்.



44 - 72 வரையான செய்யுள்களில் குகனின் கட்டளைப்படி நாவாய்கள் வருதல், பரதன் சேனைகள் கங்கையைக் கடத்தல், மகளீர் ஓடத்தில் செல்லல், மரக்கலங்கள் சென்று மீளும் காட்சி, முனிவர்கள் வான்வழியாகக் கங்கையைக் கடத்தல், சேனை முதலாக அனைவரும் கங்கையைக் கடத்தல், பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகஞ் செய்தல், பரதன் கோசலைக்குக் குகனை அறிமுகம் செய்தல், கோசலை குகனை அவர்களுக்குச் சகோதரனாக்கி உரைத்தல், சுமித்திரையைப் பரதன் குகனுக்கு அறிமுகம் செய்தல், கைகேயியை யாரெனக் குகன் வினவப் பரதன் அவளை அறிமுகம் செய்தல், குகன் அவளை வணங்களும் தோணி கரை சேர்தலும், தாயர் பல்லக்கில் வரப் பரதன், குகன் முதலியோர் நடந்து வரல், பரதனைப் பரத்துவாச முனிவர் எதிர்கொள்ளளும், பரதன் நடந்து அவரிடம் செல்லலும் முதலான விடயங்கள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

தென் கரை சேர்க்க, குகனை பரதன் வேண்டுதல்

அவ் இடை, அண்ணல்தானும், அன்று, அரும் பொடியின் வைகி,

“தெவ் இடைதர நின்று ஆர்க்கும் செறி கழல் புளிஞர் கோமா அன்!

இவ் இடை, கங்கை ஆற்றின் ஏற்றினை ஆயின், எம்மை

வெவ் இடர்க் கடல் நின்று ஏற்றி, வேந்தன்பால் விடுத்தது“ என்றான் .44

தலைவனாகிய பரதனும், அந்த இடத்தில் அன்றைய இரவு தங்குதற்கியலாத புழுதி மண்ணில் தங்கியிருந்து (பொழுது விடிந்ததும்), பகைவர்கள் தோற்றோடும் தங்கி ஒலிக்கும் கட்டப்பட்ட விரக்கழல் அணிந்த, வேடர்களுக்கு அரசனாகிய குகனே! இந் நேரத்தில் கங்கையாற்றிலிருந்து எம்மைக் கரையேற்றித்(தென்கரை) சேரச் செய்தால் கொடிய துன்பக்கடலிலிருந்து கரையேற்றி அரசனாகிய இராமனிடத்தில் அனுப்பியது போலாகும் என்று சொன்னான்.

குகன் கட்டளைப்படி நாவாய்கள் வருதல்

“நன்று“ எனப் புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை “நாவாய்

சென்று இனித் தருதிர்“ என்ன, வந்தன - **சிவன் சேர் வெள்ளிக்**

குன்று என, குனிக்கும் அம் பொன் குவடு என, குபேரன் மானம்

ஒன்று என, நாணிப் பல் வேறு உருவு கொண்டனைய ஆன .45

(பரதன் கூறியதைக் கேட்டு) வேடர் அரசனாகிய குகன், நல்லது என்று சொல்லித் தம் இனத்தவரை அடைந்து, நீங்கள் (தென்) கரைசென்று இனிமேல் படகுகளைக் கொண்டு வருக வென்று சொன்னதும், நாவாய்கள் சிவபெருமானின் வெள்ளிமலை போல, (சிவன் முப்புரம் எரித்தபோது) வில்லாக வளைத்த அழகிய மகாமேருவாகிய பொன் மலையைப் போல, குபேரனின் புட்பக வாகனம் போல தாம் தனித்தனியாக இருப்பதற்கு வெட்கமுற்று, ஒவ்வொன்றும் பல்வேறு வடிவங்களை எடுத்துக் கொண்டு கங்கையாற்றிலே வந்தன.

நாவாய்களின் தோற்றப் பொலிவு

நங்கையர் நடையின் அன்னம் நாண் உறு செலவின் நாவாய்,

கங்கையும் இடம் இலாமை மிடைந்தன - கலந்த எங்கும், -

அங்கொடு, இங்கு, இழித்தி ஏற்றும் அமைதியின், **அமரர் வையத்து**

இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இருவினை என்னல் ஆன .46

பெண்களின் நடையையும், அன்னப்பறவைகள் நாணும்படியாக நீரில் செல்லுதலையும் உடைய படகுகள், அக்கரையில் உள்ளவர்களை இக்கரையில் ஏற்றியிறக்கும் தன்மையினால், தேவருலகமாகிய அவ்வுலகோடு இவ்வுலகத்தினரை ஏற்றி இறக்கும் புண்ணியம், பாவம் ஆகிய இரு வினைகள் என்று சொல்லத்தக்கனவாக இருந்தனவாய், கங்கை நதியிலும் இடமில்லை என்னும்படி நெருங்கின, எல்லா இடங்களிலும் சேர்ந்தன.

பரதன் சேனையோடு கங்கையை கடத்தல்

"வந்தன, வரம்பு இல் நாவாய் வரி சிலைக் குரிசில் மைந்த!

சிந்தனை யாவது?" என்று, சிருங்கிபேரியர்கோன் செப்ப,

சுந்தர வரி விலானும் சுமந்திரன் தன்னை நோக்கி,

"எந்தைஇத் தானைதன்னை ஏற்று !தி, விரைவின்" என்றான் .47



சிருங்கிபேரம் என்னும் நகரிலுள்ளோர்க்கு அரசனாகிய குகன்(பரதனைப் பார்த்து) இறுக்கமான கட்டமைந்த விற்றொழிலில் சிறந்தவனாகிய தசரதனின் மைந்தனே! கணக்கற்ற படகுகள் வந்து சேர்ந்துள்ளன. (உன்) மனக்கருத்து யாது? என்று சொல்ல, அழகிய, இறுக்கிய கட்டமைந்த வில்லினையுடைய பரதனும் மூத்த அமைச்சனாகிய சுமந்திரனை நோக்கி, என் தந்தையே! இச் சேனைகளை விரைவாகப் படகுகளில் ஏற்றுக என்றான்.

குரிசிலது ஏவலால், அக் குரகதத் தேர் வலானும்,

வரிசையின் வழாமை நோக்கி, மரபுளி வகையின் ஏற்ற,

கரி, பரி, இராதம், காலாள், கணக்கு அறு **<u>கரை இல் வேலை</u>**,

எரி மணி திரையின் வீசும் கங்கை யாறு ஏறிற்று அன்றே !48

பரதனது கட்டளையால் குதிரைகள் பூட்டிய தேரினைச் செலுத்துதலில் வல்லவனாகிய அச்சுமந்திரனும், முறை தவறாமற் பார்த்து அவரவர்குரிய மரபின்படி படகுகளில் ஏற்றியனுப்ப, நாற்படைகளாகிய, கணக்கிட முடியாத சேனைக்கடல், ஒளிவீசும் மணிகளைக் கரையில் அலைகள் எறிகின்ற கங்கையாற்றைக் கடந்து அக்கரை சென்று ஏறியது.

இடிபடு முழக்கம் பொங்க, இன மழை மகர நீரை

<u>முடிவு உற முகப்ப, ஊழி இறுதியின் மொய்ப்ப போலக்</u>

<u>கொடியொடு வங்கம் வேலை கூம்பொடு படர்வ போல</u>

நெடிய கை எடுத்து நீட்டி நீந்தின, நெடுங் கை வேழம் .49

மேகக் கூட்டங்கள், ஒன்றுடன் ஒன்று மோதியுண்டான முழக்கவொலி அதிகரிக்க, ஊழிக் காலத்தில் கடல் நீர் முழுவதும் வற்றுமாறு முகந்து உண்பதற்குத் திரண்டன போலவும், கொடியோடு கூடிய கப்பல்கள் கடலில் பாய்மரத்தோடு பரந்து செல்வதைப் போலவும், நீண்ட துதிக்கையையுடைய யானைகள் தமது நீண்ட துதிக்கையை உயர்த்திக் கொண்டு கங்கையில் நீந்திச் சென்றன.

சங்கமும் மகர மீனும் தரளமும் மணியும் தள்ளி,

வங்க நீர்க் கடலும் வந்து தன் வழிப் படர, மானப்

பொங்கு வெங் களிறு நூக்க, கரை ஒரீஇப் போயிற்று அம்மா-

கங்கையும் இராமற் காணும் காதலது என்ன மாதோ !50

பெருமை மிக்க, மேற்கிளம்பிய கொடிய யானைகள் தள்ளுதலால் சங்கு, சுறாமீன், முத்து, மாணிக்கக்கற்கள் ஆகியவற்றை (அலைகள்) கரையில் சேர்க்கின்ற, மரக் கலங்களையுடைய நீர் மிகுந்த கடலானது தன்னிடத்து வந்து பரவும்படி கங்கையாறானது கரைகடந்து சென்றது.

பாங்கின் உத்தரியம் மானப் படர் திரை தவழ, பாரின்

வீங்கு நீர் அழுவம் தன்னுள், விழு மதக் கலுழி வெள்ளத்து

ஓங்கல்கள் தலைகள் தோன்ற, **ஒளித்து அவண் உயர்ந்த கும்பம்,**

பூங் குழற் கங்கை நங்கை முலை எனப் பொலிந்த மாதோ !51

பக்கத்தில் பெண்களின் மேலாடைபோலக் கரைமேல் அலைகள் தவழ்ந்து செல்ல, உலகின் மிகுந்த நீர்ப்பரப்பினையுடைய ஆற்றுப் பள்ளத்துள் விழுகின்ற மதநீர்ப் பெருக்காகிய கலங்கள் வெள்ளத்தையுடைய மலைபோன்ற யானைகள், ஆற்றுநீரால் உடல் முழுவதும் மறைக்கப்பட்டுத் தலைகள் மாத்திரம் மேலே தோன்ற, அங்கே கங்கைநீர்ப் பரப்பில் உயர்ந்து தோன்றுகின்ற அவற்றின் தலைமேடுகள் (யானைகளின்), பூச்சூடிய கூந்தலையுடைய கங்கையாகிய இளம்பெண்ணின் மார்பகங்கள் போல விளங்கின.

கொடிஞ்சொடு தட்டும், அச்சும், ஆழியும், கோத்த மொட்டும்,

நெடுஞ் சுவர்க் கொடியும், யாவும், நெறி வரு முறையின் நீக்கி,

விடும் சுவல் புரவியோடும் வேறு வேறு ஏற்றிச் சென்ற-

மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினை என - வயிரத் தேர்கள் !52

வலியதேர்கள் கொடிஞ்சி, தேர்த்தட்டு, சக்கரம் ஆகியன சேர்திணைத்த மொட்டும், நீண்ட இருபக்கச் சுவர்களின்மேல் கட்டிய கொடியும், பிறவற்றையும் முறைப்படி தனித்தனியாகப் பிரித்து, கத்தரியாமல் விட்ட பிடரி மயிர்களையுடைய குதிரையோடும் தனித்தனியாகப், இறந்தபின் அவ்வுயிர்க்கு வேறோர் உடம்பினைக் கூட்டுவிக்கும் செயல்போல, தென்கரைக்கு ஏற்றிச் செல்லப்பட்டன.

நால்இரண்டு ஆய கோடி-, நவை இல் நாவாய்கள் மீதா,

சேல் திரண்டனைய ஆய கதியொடும், நிமிரச் சென்ற -

பால் திரண்டனைய மெய்ய, **பயம் திரண்டனைய நெஞ்ச**,

கால் திரண்டனைய கால, கடு நடைக் கலினப் பாய் மா .53



பால் திரண்டதைப் போன்ற உடம்பையும், அச்சம் திரண்டதைப் போன்ற மனத்தையும், காற்று ஒன்று கூடியதைப்போன்ற காலினையும், விரைந்து செல்லும் நடையையும், பூட்டிய கடிவாளத்தையும் உடைய எட்டுக்கோடி பாயும் குதிரைகள், கயல்மீன் கூட்டம் விரைந்து செல்வதைப் போன்ற வேகத்தோடு, எதுவித பிழையுமில்லாத படகுகளின்மேல் நிமிர்ந்து சென்றன.

மகளிர் ஓடத்தில் செல்லுதல்

ஊடு உற நெருக்கி, ஓடத்து, ஒருவர்முன் ஒருவர் கிட்டி,

சூடகத் தளிர்க் கைம் மாதர் குழுமினர் துவன்றித் தோன்ற,

பாடு இயல் **களி நல் யானைப் பந்தி அம் கடையின் குத்தக்**

கோடுகள் மிடைந்த என்ன, மிடைந்தன குவவுக் கொங்கை .54

வளையல்கள் அணிந்த தளிர்போன்ற கைகளையுடைய மகளிர் இடையே புகுந்து நெருக்கி, நாவாய்களில் ஒருவர்முன் ஒருவர் அண்மித்துத் திரண்டு நெருங்கித் தோன்றுதலால் பெருமையும், மத மகிழ்ச்சியும் உடைய உத்தமமான யானை வரிசையில், அழகிய முனைகளால் குத்துமாறு கொம்புகள் நெருங்கின எனும்படி, அம்மகளிரின் திரட்சியான முலைகள் நெருங்கின.

பொலங் குழை மகளிர், நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்று தாக்க,

மலங்கினர் இரண்டு பாலும் மறுகினர் வெருவி நோக்க,

அலங்கு நீர் வெள்ளம் தள்ளி அழிதர, அங்கும் இங்கும்

கலங்கலின், **<u>வெருவிப் பாயும் கயற்குலம் நிகர்த்த, கண்கள்</u>** .55

மரக்கலங்கல் வேகமாகச் செல்கையில் ஒன்றுடன் ஒன்று மோதக் கண்ட மகளிர் கலங்கி, மயங்கி, அச்சமடைந்து இருபக்கமும் பார்க்கையில் அவர்களது கண்கள் நீர் பெருகித் தள்ளி நிலை கெடுவதானது, ஆற்று நீர் கலங்குவதனால் பயந்து துள்ளும் கயல்மீன் கூட்டம் போல் இருந்தது.

இயல்வு உறு செலவின் நாவாய், இரு கையும் எயினர் தூண்ட,

துயல்வன துடுப்பு வீசும் துவலைகள், மகளிர் மென் தூசு

உயல்வு உறு பரவை அல்குல் ஒளிப்பு அறத் தளிப்ப, உள்ளத்து

அயர்வுறும் மதுகை மைந்தர்க்கு அயாவுயிர்ப்பு அளித்தது அம்மா !56

இயல்பாகச் சென்ற மரக்கலங்களில் வேடர்கள் இருபக்கத்திலும் உந்த அசைகின்ற துடுப்புகள் சிந்தும் நீர்த் திவலைகள், மகளிரது மெல்லிய ஆடைக்குள் மறைந்திருந்த அல்குலை வெளித்தோன்றச் செய்ய, இதுவரை இராமனின் பிரிவால் மனச் சோர்வுடன் கல்வியில் ஈடுபடாதிருந்த மனவலிமை கொண்ட வீரர்களுக்குத் துன்பம் நீங்கி, உற்சாகத்தை உண்டாக்கியது.

மரக்கலங்கள் சென்று வரும் காட்சி

இக் கரை இரைத்த சேனை **<u>எறி கடல்</u>** முகந்து, வெஃகி,

அக் கரை அடைய வீசி, வறியன அணுகும் நாவாய் -

<u>புக்கு அலை ஆழி நல் நீர் பொறுத்தன போக்கிப் போக்கி,</u>

<u>அக் கணத்து உவரி மீளும் அகல் மழை நிகர்த்த</u> அம்மா ! 57



கங்கையின் வடகரையில் உள்ள ஆராவாரமிக்க சேனைக் கடலை விரும்பி ஏற்றிக் கொண்டு தென்கரை அடைந்து, அவற்றை முற்றாக இறக்கிவிட்டு, ஒன்றுமிலாததாய் மீண்டும் வடகரை வந்து சேரும் மரக்கலங்கள், அலைகடலுட் புகுந்து மிகுதியான நீரை முகந்து சுமந்தனவாய்ப் புறப்பட்டுச் சென்று மழையாகப் பொழிந்து கழித்துக் கழித்து, அடுத்த கணத்திலேயே மீண்டும் கடல் நீரை முகப்பதற்காக கடலுக்குத் திரும்புகின்ற அகன்ற மேகத்தை ஒத்திருந்தன.

<u>அகில் இடு தூபம் அன்ன ஆய் மயில் பீலி</u> ஆர்த்த

<u>முகிழுடை முரண் மாத் தண்டு கூம்பு என</u>, முகிலின் வண்ணத்

துகிலொடு தொடுத்த செம் பொன் **<u>தகட்டிடை தொடுத்த முத்தின்</u>**

<u>நகு கொடி நெடிய பாயா, நவ் எனச் சென்ற நாவாய்</u> .58

மரக்கலங்கள், அகிற் கட்டைகளால் உண்டாக்கப்பட்ட புகையைப் போன்று அழகிய மயிற்றோகைகள் கட்டப் பெற்ற அரும்பு போன்ற உறுப்பினைத் தலையிற் கொண்ட தண்டுகள் பாய்மரமாகத் தோன்ற, மேகநிறமான துணியொடு கட்டப்பெற்ற செம்பொன்னாலான தகட்டின் இடையே அழகுறத் தைத்த முத்துக்களால் விளங்கும் கொடிகள், நீண்ட பாயாகத் தோன்ற, பெரிய பாய்மரக் கப்பல்கள் போலச் சென்றன.

ஆனனம் கமலத்து அன்ன, **மின் அன்ன**, **அமுதச் செவ் வாய்**,

தேன் நனை, குழலார் ஏறும் அம்பிகள் **சிந்து முத்தம்**

மீன் என, **விரிந்த கங்கை விண் என**, **பண்ணை முற்றி**

வானவர் மகளிர் ஊரும் மானமே நிகர்த்த மாதோ !59

கங்காநதி ஆகாயம் ஆக, கங்கையாறு சிந்தும் முத்துக்கள் விண்மீன்கள் ஆக, தாமரை மலர் போன்ற முகம், அழுதுறும் சிவந்த வாய் ஆகியவற்றையுடைய மின்னலையொத்த இடையையுடைய தேன் சிந்தும் கூந்தலையுடைய மகளிர் ஏறிச் செல்லும் ஓடங்கள், தேவமகளிர் நீர் விளையாடிய பின் மேலேறிச் செல்லும் விமானங்களை ஒத்தன.

துளி படத் துழாவு திண் கோல் துடுப்பு இரு காலின் தோன்ற,

நளிர் புனல் கங்கை ஆற்றில் **நண்டு எனச் செல்லும் நாவாய்**,

களியுடை மஞ்ஞை அன்ன, கனங் குழை, **கயல் கண்**, **மாதர்**

ஒளிர் அடிக் கமலம் தீண்ட, உயிர் படைத்தனவே ஒத்த .60

துளிகள் உண்டாகும்படி (நீரை) துழாவுகின்ற, வலிய கோல்களையுடைய துடுப்புகள் இருகால்களைப் போல தோன்ற, குளிர்ந்த நீரையுடைய கங்கையாற்றில் நண்டு என்று சொல்லும் படியாகச் செல்லும் மரக்கலம், மகிழ்வுற்ற மயிலை ஒத்த, பொன்னாலாகிய தோடு அணிந்த, கயல்மீன் போன்ற கண்களையுடைய, மகளிரின் விளங்குகின்ற காலடித் தாமரைகள் படுதலால், உயிர் பெற்றன போன்றிருந்தன.

முனிவர் வான் வழியாக கங்கையை அடைதல்

மை அறு விசும்பில், மண்ணில், மற்றும் ஓர் உலகில், முற்றும்

மெய் வினை தவமே அன்றி மேலும் ஒன்று உளதோ? கீழோர்

செய் வினை நாவாய் ஏறித் தீண்டலர் மனத்தின் செல்லும்

மொய் விசும்பு ஓடம் ஆக, தேவரின் முனிவர் போனார். 61

(நாவாயில்களில் பலரும் ஏறிச் செல்ல) முனிவர்கள், கீழான மனித சாதியாற், செய்யப்பட்ட மரக்கலத்ததைத் தீண்டி, ஏறாதவர்களாய், தாம் நினைத்தவுடன் செல்லும் ஆகாயத்தையே ஓடமாகக் கருதி தோவர்களைப் போல வான்வழியே சென்றார்கள். குற்றமற்ற விண்ணுலகிலும், மண்ணுலகிலும், வேறு உலகிலும் தவத்தைப் போல செய்து முடிக்கக்கூடிய உண்மையான தொழில் வெறொன்று உள்ளதா? இல்லை என்பதாகும்.



அனைவரும் கங்கையை கடத்தல்

“அறுபதினாயிரம் அக்குரோணி“ என்று

இறுதி செய் சேனையும், எல்லை தீர் நகர்

மறு அறு மாந்தரும், மகளிர் வெள்ளமும்,

செறி திரைக் கங்கை, பின் கிடக்கச் சென்றவே . 62



"அறுபதினாயிரம் அக்குறோணி எனக் கணக்கிட்டு முடிவாகிய சேனைகளும், அளவு கடந்த அயோத்தி நகரத்துக்குக் குற்றமற்ற மக்கள் கூட்டமும், பெண்கள் கூட்டமும், நெருக்கமாக அலைவீசுகின்ற கங்கையாற்றைக் கடந்து சென்றன.

நாவாயில் பரதன் ஏறுதல்

கழித்து நீர் வரு துறை ஆற்றை, சூழ் படை
கழித்து நீங்கியது என, கள்ள ஆசையை
அழித்து, வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழித்து, மேல் ஏறினான் தானும் ஏறினான் .63

தன்னைச் சுற்றியுள்ள சேனையானது நீர்சுழித்துப் பெருகிவரும் கரையமைந்த கங்கையாற்றினைக் கடந்துவிட, வஞ்சகமான மண்ணாசையைப் போக்கிய குணத்தினால் இம் மண்ணினை முன்னர் ஆட்சிபுரிந்த அரசர்கள் யாவரையும் தனக்குக் கீழ்ப்பட்டவர்களாக ஆக்கி மேம்பட்டு நின்ற பரதனும் நாவாயில் ஏறினான்.

பரதன் குகனுக்கு கோசலையை அறிமுகம் செய்தல்

சுற்றத்தார், தேவரொடும் தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கி,
"கொற்றத் தார்க் குரிசில்இவர் ஆர் !?" என்று குகன் வினவ, "கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றாளைப்
பெற்றத்தால் பெறும் செல்வம், யான் பிறத்தலால், துறந்த பெரியாள்" என்றான். 64

(குகன்) உறவினர்கள், தேவர்களோடு வணங்கத்தக்கவாறு இருந்த கோசலைப் பிராட்டியை வணங்கிப் பார்த்து, வெற்றிமாலை சூடிய பரதனே! இவர் யாரவர் என்று கேட்க, (அதற்குப் பரதன்) அரசர்கள் தங்கியிருக்கும் முன்றிலையுடைய தசரதனின் முதல் பட்டத்தரசி, மூவுலகையும் படைத்த பிரமதேவனை முன்னால் தோற்றுவித்த (தனது திருவுந்தியினின்றும் தோற்றுவித்த ஸ்ரீநாராயணன் அவதாரமாகிய) இராமனை மகனாகப் பெற்றதால், தான் பெறவேண்டிய அரசுச் செல்வத்தை, நான் பிறந்த காரணத்தால் இழந்த பெருமைக்குரியவள் என்று கூறினாள்.

பரதன் கோசலைக்கு குகனை அறிமுகம் செய்தல்

என்றலுமே, அடியின் மிசை நெடிது வீழ்ந்து அழுவானை, "இவன் யார்?" என்று,
<u>கன்று பிரி காராவின் துயர் உடைய கொடி</u> வினவ, கழல் கால் மைந்தன்,
"இன் துணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும் இளையவற்கும், எனக்கும், மூத்தான்
<u>குன்று அனைய திரு நெடுந் தோள்</u> குகன் என்பான், இந் நின்ற குரிசில்" என்றான். 65



என்று பரதன் கூறியவுடன் கோசலையின் திருவடிகள் மீது நீண்டநேரம் வீழ்ந்து கிடந்து அழுகின்ற குகனை, கன்றைப் பிரிந்த காராம் பசுவின் துயருடைய கோசலை இவன் யார்? என்று கேட்க, வீரக் கழலலணிந்த கால்களையுடைய பரதன், இதோ வணங்கி நிற்கும் ஆண்மகன் இராமனுக்கு இனிய சகோதரன், இலக்குவணனுக்கும் சத்துருக்கனுக்கும் எனக்கும் அண்ணன், மலையையொத்த திரண்ட அழகிய நீண்ட தோள்களையுடைய குகன் என்னும் பெயருடையவன் என்றான்.

கோசலை குகனையும் பரதனுக்கு சகோதரனாக்குதல்

"நைவீர் அலீர் மைந்தீர்இனித் துயரால் ! நாடு இறந்து காடு நோக்கி,

மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று ஆம் அன்றே !**<u>விலங்கல் திண்தோள்</u>**

<u>கை வீரக் களிறு அனைய காளை</u> இவன் தன்னோடும் கலந்து, நீவிர்

ஐவீரும் ஒருவீர் ஆய், அகல் இடத்தை நெடுங் காலம் அளித்திர்" என்றாள் .66


அயோத்தியா காண்டம்

(அது கேட்ட கோசலை அவர்களை நோக்கி) என் பிள்ளைகளே! இனிமேல் துன்பத்தால் நீங்கள் வருந்தாது இருப்பீர்களாக. சுத்தவீரர்களாகிய இராம இலக்குமனர்கள் கோசல நாட்டைத் துறந்து காடு நோக்கிப் புறப்பட்டுச் சென்றதுவும் நன்மைக்கு காரணமாயிற்றல்லவா? (குகனைச் சகோதரனாகப் பெற்றதால்) மலைபோன்ற வலிய தோளையும், துதிக்கையாற் செய்யும் வீரச் செயலை உடைய ஆண்யானையை ஒத்த ஆண் மகனாகிய இந்தக் குகனோடு ஒன்றுபட்டு, நீங்கள் ஐவருமாக அகன்ற நிலவுலகை நீண்டகாலம் அரசாட்சி செய்து காப்பாற்றுவீர்களாக! என்றாள்.

பரதன் குகனுக்கு சுமித்திரையை அறிமுகம் செய்தல்

<u>அறம் தானே என்கின்ற அயல் நின்றாள்</u>தனை நோக்கி, "ஐயஅன்பின் !

நிறைந்தாளை உரை" என்ன, "நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்பது ஆக்கி

இறந்தான் தன் இளந் தேவி யாவர்க்கும் தொழுகுலம் ஆம் இராமன் பின்பு

பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான் தனைப் பயந்த பெரியாள்" என்றான். 67



அறக்கடவுளே என்று கூறத்தக்கவளாய் அருகில் நின்ற சுமித்திராதேவியைக் குகன் பார்த்து, பரதனே! அன்பால் நிறைந்த இப் பெருமாட்டியை யாரென்று எனக்குச் சொல் என்று கேட்க, (அதற்குப் பரதன்) சத்திய வழியினின்றும் சிறிதும் மாறுபடாத தன் வாய்மையை என்றும் நிலைநிறுத்தி (பொய்யுடலை நீத்து இறந்தவனாகிய) தசரதனின் இளைய பட்டத்தரசியாவாள். மேலும் இவள் யாவர்க்கும் வணங்கத்தக்க குலதெய்வமாகிய இராமனுக்குப் பின்னே பிறந்த தம்பியும் ஒருவன் உளன் என்று அனைவரும் சொல்லுமாறு இராமனை விட்டு நீங்காத இலக்குமணனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவள் என்றான்.

குகன் கைகேயியை யார் என வினவுதல்

சுடு மயானத்திடை தன் துணை ஏக, தோன்றல் **<u>துயர்க் கடலின்</u>** ஏக,

கடுமை ஆர் கானகத்துக் **<u>கருணை ஆர்கலி</u>** ஏக, கழல் கால் மாயன்

நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம், தன் மனத்தே நினைந்து செய்யும்

கொடுமையால், அளந்தாளை, "ஆர் இவர்? " என்று உரை என்ன, குரிசில் கூறும்: 68

(பின்னர் குகன்) தன் கணவனாகிய தசரதன் சுடுகாட்டுக்குச் செல்ல, மகனாகிய பரதன் துன்பக் கடலில் செல்ல, அருட்கடலாகிய இராமன் கொடுமையான காட்டினிடையே செல்ல, (இவ்வாறு செய்து) கழலலணிந்த கால்களையுடைய திருமால் எடுத்த நெடிய திருவுருவத்தால் முன்பு மூவடியில் ஈரடியால் அளந்த எல்லா உலகங்களையும் (திருமாலைப் போல அவதாரம் எடுத்து சிரமப்படாமல்) தன் மனத்தின்கண் தானே எண்ணிச்செய்கின்ற கொடுமையால் எளிதாக அளவு செய்தவளாகிய கைகேயியை "இவர் யார்?" என்று கேட்க, பரதன் கூறுவான் ஆயினான்.

பரதன் கைகேயியை அறிமுகம் செய்தல்

"படர் எலாம் படைத்தாளை, பழி வளர்க்கும் செவிலியை, தன் பாழ்த்த பாவிக்

குடரிலே நெடுங் காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம் குறைந்து தேய,

உடர் எலாம் உயிர் இலா எனத் தோன்றும் உலகத்தே, ஒருத்தி அன்றே,

இடர் இலா முகத்தாளை, அறிந்திலையேல், இந்நின்றாள் என்னை ஈன்றாள்". 69

துன்பங்கள் யாவற்றையும் உண்டாக்கியவளை, பழியாகிய குழந்தைக்கு வளர்ப்புத்தாயை, தனது பாழான தீவினையுடைய வயிற்றிலே, நீண்ட நாட்கள் கிடந்த எனக்கும் உயிராகிய சுமை குறைந்து தேயும்படி, உடல்கள் எல்லாம் உயிரில்லாதன என்று தோன்றும் உலகில், இவ் ஒருத்தி மட்டும் அல்லவா துன்பமற்ற முகத்தைக் கொண்டே அறிந்திராவிடில், இதோ இருக்கின்றவள் என்னைப் பெற்ற கைகேயியாவாள்.

குகன் கைகேயியை வணங்குதலும், தோணி கரை சேர்தலும்

என்னக் கேட்டு, அவ் இரக்கம் இலாளையும்

தன் நல் கையின் வணங்கினன் தாய் என்

அன்னப் பேடை சிறை இலது ஆய்க் கரை

துன்னிற்று என்னவும் வந்தது, தோணியே .70

குகன், பரதன் இவ்வாறு சொல்லக் கேட்டு, அந்த இரக்கமற்ற கைகேயியையும் தனது நல்ல கைகளால், தனது தாயெனக் கருதி கைகேயியை வணங்கினான். தோணியானது, பெண் அன்னம் சிறகுகளின்றிக் கரையைசேர்ந்ததெனக் கூறும்படிகரையினை அடைந்தது.

தாயர் பல்லக்கில் வர, பரதன் முதலியோர் நடந்து செல்லல்

இழிந்த தாயர் சிவிகையின் ஏற, தான்,

பொழிந்த கண்ணின் புதுப் புனல் போயினான் -

ஒழிந்திலன் குகனும் உடன் ஏகினான் -

கழிந்தனன், பல காவதம் காலினே .71

தோணியிலிருந்து இறங்கிய தாய்மார்கள் பல்லக்கில் ஏறி உடன்வரப் பரதன் கண்ணிலிருந்து பொழிந்த புதிய கண்ணீரில் நடந்து சென்றான். குகனும் தனது நாட்டில் தங்காது அவனுடன் கூடவே சென்றான். இவ்வாறு பரதன் பல காவத தூர வழிகளைக் காலால் நடந்து கடந்தான்.



பரத்துவாச முனிவர் பரதனை எதிர் கொள்ளல்

பரத்தின் நீங்கும் பரத்துவன் என்னும் பேர்

வரத்தின் மிக்கு உயர் மாதவன் வைகு இடம்,

அருத்தி கூர, அணுகினன் ஆண்டு, அவன்

விருத்தி வேதியரோடு எதிர் மேவினான் . 72

(பரதன் தனது கூட்டத்தவருடன்) வினைச் சுமையிலிருந்து விலகிய பரத்துவாசன் எனும் பெயர் கொண்ட, மேன்மை மிக்க, உயர்ந்த முனிவர் தங்கிய ஆச்சிரமத்தை அன்பு மிகுந்திட அடைந்தான். அப்பரத்துவாச முனிவனும் அவ்விடத்தில் அறுதொழிலுடைய அந்தனரோடு அவனை எதிர்கொண்டு வந்தான்.

(புபு – 72) பாடல் வரையான இக் குகப்படலப் பகுதியில் வினாவப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.

01. 44 - 72 வரையான செய்யுள் பகுதியுள் கூறப்படும் விடயங்கள் எவை?
02. குகனிடம் கங்கையாற்றை கடக்க உதவுமாறு பரதன் எவ்வாறு வேண்டுகிறான்?
03. குகனின் படையிலுள்ள நாவாயில்களை ஆசிரியர் எவ்வாறு வர்ணித்துப் பாடுகிறார்?
04. பரதனின் சேனை கங்கையாற்றைக் கடத்தலை ஆசிரியர் எவ்வாறு வர்ணித்துப் பாடுகிறார்?
05. பரதனின் சேனையிலுள்ள பெண்கள் படகில் சென்றதை ஆசிரியர் எவ்வாறு பாடுகிறார்?
06. மரக்கலங்கள் கங்கைக் கரையை சென்று மீளுதலை ஆசிரியர் எவ்வாறு சிறப்பிக்கிறார்?
07. நாற்படைகளை எவ்வாறு கம்பர் எடுத்துக் காட்டுகிறார்?
08. முனிவர்கள் கங்கையாற்றை எவ்வாறு கடந்து சென்றனர்?
09. பரதன் நாவாயில் ஏறும் செயற்பாட்டை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கிறார்?
10. பரதன் கோசலையை எவ்வாறு குகனுக்கு அறிமுகம் செய்கிறான்?
11. பரதன் குகனை தாய்மாருக்கு எவ்வாறு அறிமுகம் செய்கிறான்?
12. பரதன் சுமித்திரையையை எவ்வாறு குகனுக்கு அறிமுகம் செய்கிறான்?
13. பரதன் கைகேயியையை எவ்வாறு குகனுக்கு அறிமுகம் செய்கிறான்?
14. பரதன் கைகேயி மீது சுமத்தும் குற்றம் யாது?
15. பரனுக்கு கைகேயி மீதான கோபம் வெளிப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக.
16. கோசலை தம் புதல்வருக்கு கூறிய அறிவுரை யாது?
17. பரதன் சென்ற ஓடம் எவ்வகையில் கரை சேர்ந்தது?
18. பரத்துவாச முனிவரை சந்திக்க கங்கை கரையிலிருந்து பரதனும், தாய்மாரும் எவ்வாறு சென்றனர்?
19. பரதனோடு வந்த படைகனை பரத்துவாசமுனி எவ்வாறு எதிர்கொண்டு வரவேற்றார்?
20. இப்பகுதியில் கம்பர் எடுத்துக்காட்டியுள்ள புராணக் கதைகளை விளக்குக.
21. இப்பகுதியில் வெளிப்படும் பரதனின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
22. இப்பகுதியில் வெளிப்படும் குகனின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
23. இப்பகுதியில் வெளிப்படும் தசரதனின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
24. இப்பகுதியில் வெளிப்படும் கோசலையின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
25. இப்பகுதியில் வெளிப்படும் சுமித்திரையின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
26. இப்பகுதியில் வெளிப்படும் கைகேயியின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
27. இப்பகுதியில் வெளிப்படும் இராமனின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
28. இப்பகுதியில் வெளிப்படும் பரத்துவாச முனிவரின் குணயியல்புகளை குறிப்பிட்டு விளக்குக.
29. இப்பகுதியில் கம்பர் கையாண்டுள்ள அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.
30. இப்பகுதியினூடாக வெளிப்படும் கம்பரின் கவித்துவத்திறனை விளக்குக.

- இப்பகுதியில் அளிக்கப்படும் வினாக்களுக்கான விடைகள் செய்யுளடியின் ஆதாரத்துடன் முன்வைக்கப்படல் பொருத்தமானதாக அமையும் அதே வேளை, ஒவ்வொரு செய்யுளிலும் வினாவப்படக்கூடிய குறுவினாக்களுக்குரிய விடைகளையும், அணிப்பிரயோகங்களையும் அவதானித்து கற்றல் அவசியமானது.